ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

(நாயனாராச்சான் பிள்ளையின் தனியன்கள்)

श्रुत्यर्थसारजनकं स्मृतिबालमित्रं पद्मोल्लसद्भगवदङ्घ्रिपुराणबन्धुम् ।
ज्ञानाधिराजमभयप्रदराजपुत्रं अस्मद्गुरुं परमकारुणिकं नमामि ॥ १

1. ஶ்ருத்யர்த்த2ஸாரஜநகம் ஸ்ம்ருதிபா3லமித்ரம்
பத்3மோல்லஸத்3ப4க3வத3ங்க்4ரிபுராணப3ந்து4ம் ।
ஜ்ஞாநாதி4ராஜமப4யப்ரத3ராஜபுத்ரம்
அஸ்மத்3கு3ரும் பரமகாருணிகம் நமாமி ॥

[வேதப்பொருள்களின் ஸாரத்தைக் கடைந்தெடுப்பவராய், ஸ்ம்ருதிகளாகிற தாமரைகளுக்கு இளஞ்சூரியனாய், ஸ்ரிய: பதியின் திருவடிகளுக்குப் பழைய உறவினராய், ஞானங்களுக்குப் பேரரசராய், அபயப்ரதராஜரின் பிள்ளையாய், பரமகாருணிகரான என் ஆசாரியரை வணங்குகிறேன்.]

अभयप्रदपाददेशिकोद्भवं गुरुमीडे निजमादरेण चाहम् ।
य इहाखिललोकजीवनादरः चरमोपायविनिर्णयं चकार ॥ २ ॥

2. அப4யப்ரத3பாத3தே3ஶிகோத்3ப4வம்
கு3ருமீடே3 நிஜமாத3ரேண சாஹம் ।
ய இஹாகி2லலோக ஜீவநாத3ர:
சரமோபாய விநிர்ணயம் சகார ॥

[அப4யப்ரத3பாத3ர் என்னும் பெரியவாச்சான்பிள்ளையாகிற ஆசாரியரின் பிள்ளையாய், எல்லா உலகினரையும் உய்விக்க விரும்பி 'சரமோபாய நிர்ணயம்' என்னும் நூலை இயற்றியவரான என் ஆசார்யரை அன்புடன் துதிக்கிறேன்.]

பரமகாருணிகரான நாயனாராச்சான் பிள்ளை
அருளிச்செய்த

சரமோபாய நிர்ணயம்

अभयप्रदपादाब्जमस्मद्देशिकमाश्रये ।
यत्प्रसादादहं वक्ष्ये चरमोपायनिर्णयम् ॥ १ ॥

1. அப4யப்ரத3பாத3ாப்3ஜமஸ்மத்3தே3ஶிகமாஶ்ரயே ।
யத்ப்ரஸாதா3த3ஹம் வக்ஷ்யே சரமோபாயநிர்ணயம் ॥

अस्मज्जनककारुण्यसुधासन्धुक्षितात्मवान् ।
करोमि चरमोपायनिर्णयं मत्पिता यथा ॥ २ ॥

2. அஸ்மஜ்ஜநககாருண்யஸுதா4ஸந்து4க்ஷிதாத்மவாந் ।
கரோமி சரமோபாயநிர்ணயம் மத்பிதா யதா2 ॥

अस्मदुद्धारकं वन्दे यतिराजं जगद्गुरुम् ।
यत्कृपाप्रेरितः कुर्मि चरमोपायनिर्णयम् ॥ ३ ॥

3. அஸ்மது3த்தாரகம் வந்தே3 யதிராஜம் ஜக3த்3கு3ரும் ।
யத்க்ருபாப்ரேரித: குர்மி சரமோபாயநிர்ணயம் ॥

पूर्वापरगुरूक्तैश्च स्वप्नवृत्तैर्यतीशभाक् ।
क्रियतेऽद्य मया सम्यक् चरमोपायनिर्णयः ॥ ४ ॥

4 பூர்வாபரகு3ருக்தைஶ்ச ஸ்வப்நவ்ருத்தைர் யதிஶபா4க் ।
க்ரியதேऽத்3ய மயா ஸம்யக் சரமோபாயநிர்ணய: ॥

உடையவருக்கு முன்புள்ள முதலிகளுடையவும், பின்புள்ள முதலிகளுடையவும் திவ்யஸூக்திகளாலும் அத்யத்3பு4தமான ஸ்வப்னவ்ருத்தாந்தங்களாலும், சரமோபாயமானது உடையவரிடத்திலே பூர்ணமாக நிர்ணயிக்கப்படுகையாலே இதுக்குச் சரமோபாய நிர்ணயமென்று திருநாமமாயிற்று.

முதலிகள் தந்தாம் ஆசார்யர்கள் பக்கலிலே ஸாக்ஷாத் ஆசார்யத்வத்தை அறுதியிட்டு அவ்வவர்களுடைய அபி₄மானமே உத்தாரகமென்று சரமோபாயத்தை அறுதியிட்டிருந்தார்களேயாகிலும், தந்தாம் ஆசார்யர்கள் உடையவரையே உத்தாரகத்வேந அறுதியிட்டுத் தங்களைப் பற்றினார்க்கும் உடையவரையே தஞ்சமாக உபதேசிக்கையாலே, ஸர்வர்க்கும் உத்தாரகத்வேந சரமோபாயத்தை அறுதியிடலாவது உடையவர் பக்கலிலேயிறே. 5 ''गुरुरिति च पदं भाति'' (கு₃ருரிதி ச பத₃ம் பா₄தி) என்கிறபடியே ஆசார்யத்வம் ஒளிவிஞ்சிச் செல்லுகிறது உடையவர் பக்கலிலே வ்யவஸ்தி₂தமிறே. வடுகநம்பி வார்த்தையை நினைப்பது. உடையவர்க்கு முன்புள்ள முதலிகள் பூ₄ர்வ்யர்த்த₂ ஜ்ஞாநமுடையவர்களாகையாலே, பரமகாருணிகரான இவரிடத்திலே உத்தாரகத்வம் நிலைநிற்குமென்று அறுதியிட்டுத் தங்களுக்குப் பேற்றில் குறையின்றிக்கேயிருக்கவும், ''கலியும் கெடும்'' என்கிற ஆழ்வாருடைய தி₃வ்யஸூக்தியை உட்கொண்டு இவரோடு அவிநாபா₄வஸம்ப₃ந்த₄த்தைப் பரமோத்தாரகமென்று நினைத்திருந்தார்கள். ஸம்ப₃ந்த₄ம் தான் த்₃விவித₄மாயிறேயிருப்பது; ஆரோஹண ஸம்ப₃ந்த₄மென்றும், அவரோஹண ஸம்ப₃ந்த₄மென்றும். அதில் ஆரோஹண ஸம்ப₃ந்த₄ம் ஆசார்யத்வேந படிப்படியாக ஏறிநிற்கும். அவரோஹண ஸம்ப₃ந்த₄ம் ஶிஷ்யத்வேந படிப்படியாக இறங்கிவரும். இவையிரண்டுக்கும் விளைநிலம் உடையவரிறே. இதில் ஒன்று நிரவதி₄கமாய் ஒன்று ஸாவதி₄கமாய் இருக்கும். 6. ''असावसावित्याभगवत:'' (அஸாவஸாவித்யாப₄க₃வத்த:) என்கிறபடியே எம்பெருமானளவும் சென்று கொழுந்திலையாயிருக்குமிறே. மற்றையது கொழுந்துவிட்டுப் படராநிற்கும். இந்த ஸம்ப₃ந்த₄ த்₃வயந்தான் இடையிட்டு வந்ததொன்றிறே. கு₃ருபரம்பரையிலே இடையிடப்பட்டாரிறே உடையவர். ஒரு முக்தாஹாரத்தில் நடுவே ஒளியுடைய மாணிக்கத்தை அழுத்தி வைத்தால் இருதலையும் நிறம்பெற்று வருமிறே. அப்படியே உடையவரும் இருதலை நாயகமாகக்கொண்டு உப₄யஸம்ப₃ந்தி₄களுக்கும் ப்ரகாஶகரானார். இரண்டு திறத்

தார்க்கும் கார்யம் கொள்ளும்போது மத்யஸ்தரைக் கொண்டு கொள்ளவேணுமிறே. நடுச்சொன்னவரிறே மத்யஸ்தராவார். நாம் பற்றினாலும் முன் பின்னுற்ற ப்ரகாரம் கார்யம் தலைக்கட்டுமிறே. பதநீரயத்துக்கும் மத்யமபதமும் போலேயாயிற்று இவரிங்கிருக்கும்படி. அதாவது—மகாரமான நாரபதமாசார்யர்க்கு இஷ்டாநிஷ்ட ப்ராப்தி பரிஹாரங்களைப் பண்ணிக்கொடுக்கவற்றான எம்பெருமானுடைய உபாயபாவத்தைக் காட்டுகிறதிறே மத்யமபதமும். அப்படியே உடையவரும் - குருபரம்பரைக் கிடையிலிருந்து ஸம்பந்தத்வயத்துக்கும் கார்யோபயோகியான தம்முடைய ஆசார்யத்வேந உத்தாரகத்வத்தை விசேஷேண வெளியிட்டுக்கொண்டு விச்வஸநீயராயிறே யிருக்கிறது. இத்தையிட்டாயிற்று 7. "अर्वाञ्चः" (அர்வாஞ்ச:) என்று அருளிச்செய்தது. இப்படி உத்தாரகமான ஆசார்யத்வந்தான் இரண்டு படிப்பட்டிருக்கும்—ஸ்வாநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யத்வம் என்றும், க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யத்வம் என்றும்; இதில் பின்பு சொன்னது க்வாசித்கமாயிருக்கும். அக்ரோக்தயானது பஹுவ்யக்திகதமாயிருக்கும். இவனுக்குப் பேறு தப்பாதென்று துணிந்திருக்கலாவது க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்ய ஸம்பந்தத்தாலேயாயிற்று. எலியெலும்பனாயிருக்கிற இவனுக்கு ஆசார்யன் திருவுள்ளத்துக்கேற்க அநுவர்த்திக்க முடியாதிறே. இவ்வர்த்தத்தில் ஆழ்வானுக்கும் ஆண்டானுக்கும் ப்ரஸங்கமாக ஆழ்வான் அறுதியிட்ட வார்த்தையை நினைப்பது. ‡ "மத்தகத்துத் தனதாளருளாலே வைத்த அவர்" என்று அவர் அருளிச்செய்கையாலே, அருளாளப் பெருமாளெம்பெருமானார்-க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யனே முக்யனென்று அறுதியிட்டார் என்று * நம்முடைய பிள்ளை பலகாலும் அருளிச்செய்வர். ப்ரதமபர்வத்தில் பரகதஸ்வீகாரம்போலே சரமபர்வத்திலும் பரகதஸ்வீகாரமே இவனுடைய பேற்றுக்கு முக்யமான உபாயமென்று

‡ ஞானஸாரம் 36

* நம்முடைய பிள்ளை - நம் ஆசார்யரான பெரியவாச்சான் பிள்ளை.

அருளிச்செய்வர். 8. ''यस्सापराधान् स्वपदप्रपन्नान् कीयकारुण्य-गुणेन पाति । स एव मुख्यो गुरुरप्रमेयः तथैव सद्भिः परिकीर्त्यते हि ॥ (யஸ்ஸாபராத4ாந் ஸ்வபத3ப்ரபந்நாந் ஸ்வகீயகாருண்ய கு3ணேந பாதி । ஸ ஏவ முக்2யோ கு3ருரப்ரமேயஸ்ததை2வ ஸத்3பி4: பரிகீர்த்யதே ஹி ॥) என்று ஸோமாசியாண்டான் ஆசார்ய வைப4வத்தை அருளிச்செய்கிற 'கு3ரு கு3ணாவளி' என்கிற ப்ரப3ந்த4த்திலே க்ருபாமாத்ரப்ரஸந்நாசார்யனே முக்2யமாக அருளிச்செய்தாரிறே. இப்படி முக்2யமான க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யத்வம் க்வாசித்கமான விடத்திலும் உத்தாரகத்வவிஶிஷ்டமாயிருக்கும். அதுவும் ம்ருக்3யமாயிருக்கும். உத்தாரகத்வவிஶிஷ்டமான க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யத்வம் பூர்ணமாகக்கடவது உடையவர் பக்கலிலேயிறே. ஸ்வாநுவ்ருத்தியினாலே நம்பியை ப்ரஸன்னராம்படி பண்ணி வருத்தத்தினாலே பெற்ற சீரிய அர்த்த2த்தைத் தாம் மேல்விழுந்து க்ருபையினாலே எல்லார்க்கும் வெளியிட்டருளினாரிறே. ராஜமஹேந்த்ரப் பெருமாளரையருக்கு அரங்கமாளிகை என்று ஒரு குமாரருண்டாய், அவர் பித்ருவசனத்2யுல்லங்க,நம் பண்ணி அவிநீதராய்த் திரிகிற நாளிலே உடையவர் அறிந்தருளி, ஸ்ரீபாத3த்திலுள்ளவர்களை அழைத்தருளி வலியப் பிடித்துக்கொண்டு வரச்சொல்லி அருளிச்செய்ய, அவர்களும் அரங்கமாளிகையை அபி4மதஸ்த2லத்தில் நின்றும் பிடித்துக்கொண்டுவந்து திருமுன்பேவிட, உடையவரும், ''பிள்ளாய்! நம்மோடு ஒட்டற்று நீ திரிந்தாலும் நாமுன்னை விட்டுக்கொடுப்பதில்லை காண்'' என்று பேரருளாளர் ஸந்நிதி4யிலே அழைத்துக்கொண்டெழுந்தருளி திருக்காப்பை அடைத்துத் திரிய ஒரு வட்டம் ப4க3வத்ஸம்ப3ந்த4ம் பண்ணியருளி, ரஹஸ்யார்த்த2த்தையும் ப்ரஸாதி3த்தருளி, தம்முடைய திருவடிகளிரண்டையும் அவர் தலையிலே வைத்தருளி, ''நீ பற்றிப்போந்த காலுக்கும் நம்முடைய காலுக்கும் வாசி கண்டாயே? அது நரகாவஹம். இது மோக்ஷாவஹம். இத்தையே தஞ்சமாக நினைத்திரும்' என்று பூர்ணமாகக் கடாக்ஷித்துத் திருவடிகளைக் காட்டியருளினார். அன்று தொடங்கி அப்படியே ப்ரதிபத்தி

பண்ணிப்போந்தாரவர். இந்த ரஹஸ்யத்தைப் பிள்ளை அடியேனுக்கு அருளிச்செய்து, உடையவர் திருவடிகளையே தஞ்சமாகக் காட்டியருளினர். அன்று தொடங்கி அப்படியே ப்ரதிபத்தி பண்ணிப்போருவன். உடையவருடைய உத்தாரகத்வவிஶிஷ்டமான க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யத்வத்துக்கு இவ்விரண்டு வ்ருத்தாந்தமும் ப்ரமாணமாக அத்₄யவஸிக்கப்போரும் அறிவுடையார்க்கு. இன்னமும் இவ்வர்த்த₂த்தை ஸ்தி₂ரீகரிக்கைக்காக உடையவர்க்கு முன்புள்ள முதலிகளுடைய தி₃வ்யஸூக்திகளும் ஸ்வப்ன வ்ருத்தாந்தங்களும் பரக்க ப்ரதிபாதி₃க்கப்படுகிறது மேல்.

நாத₂முனிகளுக்கு ஆழ்வார் திருத்திரை வளைத்துத் திருவாய்மொழி ப்ரஸாதி₃த்தருளுகிறவளவிலே "பொலிக பொலிக" வந்தவாறே பூ₄தப₄விஷ்யத்₃வர்த்தமான காலத்ரய பர்யவஸாயிஜ்ஞானமுடையவராகையாலே உடையவருடைய திருவவதாரத்தைக் கடாக்ஷித்தருளி "கலியும்கெடும் கண்டுகொண்மின்" என்று "இந்த ப்ரபந்நகுலத்திலே ஒரு மஹாநுப₄ாவர் திருவவதரிக்கப்போகிறார். அவராலே நாடடங்க வாழப்போகிறது" என்று நாத₂முனிகளுக்கு அருளிச்செய்ய, அவரும், "பயனன்றாகிலும்" என்கிற பாட்டை இயலும் இசையுமாக ஏறிட்டு ஆழ்வாரைப் பாடி உகப்பித்து, "தேவரீர் ஸர்வஜ்ஞராகையாலே அறியப்போகாததொன்றுமில்லை. அவ்யக்தியினுடைய ஸம்ஸ்தா₂நத்தை தேவரீர் ப₂ாவித்துக் காட்டியருளவேணும்" என்று ப்ரார்த்தி₂க்க, அற்றை ராத்ரியிலே நாத₂முனிகளுக்கு ஸ்வப்நமுகே₂ந ஆழ்வார் எழுந்தருளி, த்₃வாத₃ஶோர்த்₄வ புண்ட்₃ரங்களும், காஷாய திருப்பரியட்டமும், த்ரித₃ண்ட₃ ஹஸ்தமும் ஆஜாநுப₃ாஹுவும் நிரவதி₄கதேஜோரூபமுமான திருமேனியும், *மகரம்சேர் குழையிருபாடிலங்கியாட தீ₃ர்க்க₄ராய் எழுந்தருளி, க்ருபாப்ரவாஹஸூசகமான முகமும், முறுவலும், சிவந்த திருக்கண்மலருமாக ஸேவை ப்ரஸாதித்தருளி, 'அவ்யக்தியிருக்கும்படி இது காணீரே' என்றருளிச்செய்து, 'இவ்யக்தியடியாக ப்ரபந்ந குலாந்தர் பூ₄தரெல்லாரும் பேறு பெறப்போகிறார்கள்' என்று

அருளிச்செய்தார். நாத2முனிகளும் உடனே உணர்ந்தருளி ஆழ்வார் திருவடிகளிலே தண்டம் ஸமர்ப்பித்து 'தேவரீருடைய ஸம்ஸ்தா2னத்திலும் தேவரீர் பா4வித்தருளின ஸம்ஸ்தா2னம் அடியேனுக்கு மிகவும் ஆகர்ஷகமாயிருந்ததீ!' என்ன, "இதென்ன மாயம்! லோகமெல்லாம் இவ்யக்தியிலே காணும் மேல்விழப்போகிறது!" என்று அருளிச்செய்தார். நாத2முனிகளும் திரியவும் ஆழ்வாரை உகப்பித்து இந்த ப4விஷ்யதா3சார்ய விக்ரஹத்தை நித்யமாக அனுப4வித்துக்கொண்டிருக்கும் விரகேதென்று விண்ணப்பம் செய்ய, ஆழ்வாரும் உடையவருடைய ஸர்வோத்தாரகத்வத்தை வெளியிடக்கடவோமென்று மற்றைநாள் ராத்ரி ஸ்வவிக்3ரஹத்துக்கடவ சில்பவம்ஶரிடத்திலே ஸ்வப்னமுகே2ந எழுந்தருளி ப4விஷ்யதா3சார்ய ஸம்ஸ்தா2னத்தை வகுத்துக் காட்டியருளி, "நாளை நம் புளிக் கீழேவந்து இப்படியே ஸர்வாவயவ பூர்ணமாகச் சமையுங்கோள்" என்று அருளிச்செய்ய, மற்றைநாள் விடிந்தவாறே, திருப்புளியின் கீழேவந்து ஶரீரஶோத4ன பூர்வகமாக ஆஹாரநித்3ரையின்றிக்கே அவ்விக்3ரஹத்தை நிர்மித்துக்கொடுக்க, அவ்விக்3ரஹத்திலே ஒரு ஶக்தி விஶேஷத்தை அதி4ஷ்டி2ப்பித்தருளி, நாத2முனிகளை அழைத்தருளி, 'உம்முடைய அபேக்ஷிதத்தை இதோ தலைக்கட்டினோம் கண்டீரே' என்று அவ்விக்3ரஹத்தை ப்ரஸாதி3த்தருளி-9, "रामस्य दक्षिणो बाहुः" (ராமஸ்ய த3க்ஷிணோ பா3ஹு:) என்கிறபடியே நம்முடைய அவயவமாக நினைத்திரும். இவ்யக்திக்கு * அடி நாமாகையாலே நமக்கு * அடியுமாய், நம் கார்யத்துக்குக்கடவதுமாயிருக்கும். இனிமேல் நம் த3ர்ஶநத்துக்கு வர்த்த4கமாக *அடியிட்டு வைத்தோம். உம்முடைய குலத்திலே ஒருவர் இவ்யக்தியை ஸாக்ஷாத்கரிக்கப் போகிறார். அதுதான் பெருமாள் திருவபி4ஷேகத்துக்குப் பாரித்த மாஸத்திலே பதினெட்டாமோத்திலே ப்ரத2மோபாயம் பிறந்தாப்போலே, நம் பிறவி நாளைக்கேறப்பார்த்தால் பதினெட்டாமவதி4யிலே சரமோபாயம் பிறக்கப் போகிறது. இவ்யக்தியை நம்மைக் கண்டு கொண்டிருந்தாப்போலே கண்டுகொண்டிரும்—

* அடி—(1) காரணம். (2) திருவடி.

என்றருளிச்செய்து விடைகொடுத்தருள, அப்போதே நாதமுனிகளும் ஆழ்வார் ஸேவை ஸாதித்தருளினதுக்குத் தோற்று, 10. "यस्स्वापकाले करुणाकरस्सन् भविष्यदाचार्यपरस्वरूपम् । संदर्शयामास महानुभावं तं कारिसूनुं शरणं प्रपद्ये ॥ (யஸ்ஸ்வாபகாலே கருணாகரஸ்ஸந் பவிஷ்யதாசார்யபரஸ்வரூபம் । ஸந்தர்ஶயாமாஸ மஹாநுபாவம் தம் காரிஸூநும ஶரணம் ப்ரபத்யே ॥) என்கிற ஶ்லோகம் அருளிச்செய்தாரென்று நம்முடைய பிள்ளை பலகாலும் அருளிச்செய்வர். இவ்வர்த்தம் ஓராண்வழியாய்ப் பரமகுஹ்யமாய்வந்ததென்றும் அருளிச்செய்வர்: இப்படி நாதமுனிகள் நாலாயிரமும் ஆழ்வார் பக்கலிலே கேட்டருளி, மீளவும் வீரநாராயணபுரத்தேற எழுந்தருளினவளவிலே, ஆழ்வார் தம்மை விஷயீகரித்த ப்ரகாரங்களை மன்னனார் திருமுன்பே அருளிச்செய்து. ஸந்நிதியிலே எல்லா வரிசைகளையும் பெற்றுத் தம்முடைய திருமாளிகையிலே எழுந்தருளித் தம்முடைய மருமக்களான கீழையகத்தாழ்வானையும் மேலையகத்தாழ்வானையும் அழைத்தருளி, ஆழ்வார் தம்மை விஶேஷ கடாக்ஷம்பண்ணி க்ருபைபண்ணியருளின ப்ரகாரத்தையும், ஸ்வப்நமுகேந ஸேவைஸாதித்த கட்டளையையும் அருளிச்செய்ய, அவர்களும் மிகவும் விஸ்மயப்பட்டு இப்படிப்பட்ட மஹாநுபாவனுடைய ஸம்பந்தம் ஆரோஹண க்ரமத்தாலேயாகிலும் உண்டாகப் பெற்றதே என்று தேறியிருக்கலாமென்றார்கள். பின்பு தம்முடைய ஸ்ரீபாதத்திலே ஆஶ்ரயித்து ஶிஷ்யகுண பூர்த்தியையுடையரான திருக்கண்ணமங்கையாண்டானுக்கு த்வயோபதேஶபூர்வகமாகத் திருவாய்மொழி ப்ரஸாதித்தருளுகிறபோது 'பொலிக பொலிக' வந்தவாறே ஆழ்வார் அருளிச்செய்த திவ்ய ஸூக்திகளையும் ஸ்வப்நவ்ருத்தாந்தங்களையும் அருளிச்செய்ய, "அவ்யக்தியை ஸ்வப்நமுகேந ஸாக்ஷாத்கரித்த தேவரீரோடே ஸம்பந்தமுள்ள அடியேனுக்கு ஒரு குறைகளுமில்லை" என்று அருளிச்செய்தார். பின்பு, உய்யக்கொண்டார், குருகைக்காவலப்பன், தம்முடைய குமாரரான ஈஶ்வரமுனிகள் இவர்களை அழைத்தருளி, ஸ்வப்னவ்ருத்தாந்தங்களையும் ஆழ்வார் அருளிச்செய்த திவ்ய

ஸூக்திகளையும் அருளிச்செய்து, குருகைக்காவலப்பனை யோகக்ரமத்தை அப்யஸிக்கச்சொல்லி உய்யக்கொண்டாரை தர்சனத்தை ப்ரவர்த்திப்பித்துக்கொண்டுவரச் சொல்லி ஈஶ்வரமுனிகளை "உமக்கொரு குமாரர் உண்டாகப் போகிறார். அவருக்கு யமுனைத்துறைவர் என்று திருநாமம் சாத்தும்" என்று அருளிச்செய்து, ஆஸந்ந சரமதஶையானவாறே உய்யக்கொண்டாரை அழைத்தருளி, 'ஒருவர்க்கும் வெளியிடாதே கிடீர்' என்று சூழரவு கொண்டு, ஆழ்வார் தமக்கு ப்ரஸாதித்தருளின பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தை ப்ரஸாதித்தருளி, வரவும் அருளிச்செய்து, 'இத்தை ஈஶ்வரமுனிகள் குமாரருக்கு நாம் விரும்பின விஷயமென்று சொல்லித் தஞ்சமாகக் காட்டிக்கொடும்' என்று அருளிச்செய்து, அவ்விக்ரஹத்தைத் திருவுள்ளத்திலே த்யானம் பண்ணிக்கொண்டு, ஆழ்வார் திருவடிகளே ஶரணம் என்று * அந்தமில் பேரின்பத்தடியரோடு ஒரு கோவையாக எழுந்தருளினார்.

பின்பு உய்யக்கொண்டார், நாதமுனிகள் ஸ்ரீபாதத்து முதலிகளும் தாமுமாக தர்ஶநார்த்தங்களை ப்ரவர்த்திப்பித்துக்கொண்டு ஸுகமே எழுந்தருளியிருக்கிற நாளிலே, உய்யக்கொண்டார் ஸ்ரீபாதத்து முதலிகள் மணக்கால்நம்பி, திருவல்லிக்கேணிப்பாண்பெருமாளரையர் ஸ்வாசார்யரிடத்திலே திருவாய்மொழி கேட்கிறவளவிலே "பொலிக பொலிக" என்கிற திருவாய்மொழி ஆனவாறே, "கலியும் கெடும்" என்கிற இடத்துக்கு அர்த்தம் அருளிச்செய்கிறவளவில், நாதமுனிகள் தமக்கு அருளிச்செய்த ஸ்வப்ன வ்ருத்தாந்தங்களையும் அருளிச்செய்ய, மிகவும் விஸ்மயப்பட்டு நாதமுனிகள் பெற்றபேறு ஆர்தான் பெறப்போகிறார்கள்? பவிஷ்யதாசார்ய வ்யக்தியை ஸ்வப்நமுகேந ஸாக்ஷாத்கரித்தவிடத்திலே அத்யாகர்ஷகமாயிருந்தது என்றருளிச்செய்யும்போது, "ப்ரத்யக்ஷமாய் ஸாக்ஷாத்கரிக்கும்படியானால் லோகமாக மேல்விழுந்து ஆஶ்ரயிக்குமாகாதே" என்றருளிச்செய்தார். அவ்வளவிலே உய்யக்கொண்டார் "அந்த மஹாநுபாவனுடைய ஸம்பந்தம் ஸித்தித்தாலொழியத் தவிராதிறே" என்று அருளிச்செய்தார்.

உய்யக்கொண்டார் சரமதஶையிலே ப்ரதம சிஷ்யரான மணக்கால் நம்பியை அழைத்தருளிப் பன்னிரண்டு ஸம்வத்ஸரம் பழுக்க ஸ்வாநுவர்த்தநம் பண்ணிப் போந்தவராகையாலே நாதமுனிகள் தமக்கருளிச்செய்த ரஹஸ்யார்த்தங்களையும் வெளியிட்டருளி, ஸ்வப்ந வ்ருத்தாந்தங்களையும் அருளிச்செய்ய, மணக்கால் நம்பியும் இந்த தர்ஶந ப்ரவர்த்தகராரென்றுகேட்க, நம்முடைய பக்கலிலே பகவத் ஸம்பந்தம் பண்ணிக்கொண்ட நீரே நடத்தக்கடவீர். பின்பு சொட்டைக் குலத்திலே நாதமுனிகளுக்குத் திருப்பேரனான யமுனைத்துறைவர் ப்ரவர்த்தகராவார். அவருக்குப் பின்பு கரையத் தேவையில்லையென்று அருளிச்செய்தார். அதாவது—நாதமுனிகள் அருளிச்செய்தபடியே ப்ரபன்ன குலமாகப் பேறுபெறும்படி ஒரு மஹாநுபாவர் திருவவதரிக்கப் போகிறார். அவராலே தர்ஶனம் விளங்கப் போகிறது—என்று அருளிச்செய்தார் என்றபடி. பின்பு—உய்யக்கொண்டாரும் மணக்கால் நம்பியை அழைத்தருளி, அவ்விக்ரஹத்தை ப்ரஸாதித்தருளி. ''நம் காலத்திலே யமுனைத்துறைவர் திருவவதரிக்கப்பெற்றதில்லையே. நீர் இவ்விக்ரஹத்தை 'உங்கள் திருப்பாட்டனார் விரும்பின விஷயம்' என்று தஞ்சமாகக் காட்டிக்கொடுத்து, நாம் சொன்ன ஸ்வப்ன வ்ருத்தாந்தங்களையும் ரஹஸ்யார்த்தங்களையும் வெளியிடும்'' என்றருளிச்செய்தார். பின்பு மணக்கால் நம்பியும் ஆளவந்தாரைப் பச்சையிட்டுக்கொண்டு கோயிலேற எழுந்தருளி, ஸ்வாசார்யரான உய்யக்கொண்டார் அநுமதிப்படியே நாதமுனிகள் அருளிச்செய்ததாக ஸ்வாசார்யர் அருளிச்செய்த அர்த்த விஶேஷங்களையும், விஶேஷித்து ஸ்வப்னவ்ருத்தாந்தங்களையும் அருளிச்செய்து 'நெடுங்காலம் தேவரீர் இந்த தர்ஶனத்தை ப்ரவர்த்திப்பித்துக் கொண்டு ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்தியோடே எழுந்தருளியிரும்' என்றருளிச்செய்தார் அப்படியே ஆளவந்தாரும் தர்ஶந ப்ரவர்த்தகராய் எழுந்தருளியிருக்கிற நாளிலே மணக்கால் நம்பி சரமதஶையானவாறே, நாதமுனிகள் ஸ்வப்னத்திலே எழுந்தருளி நம்பியைப் பார்த்து, 'நம்முடைய யமுனைத்துறைவர்க்கு *நாட்டையளித்துய்யச்

செய்து நடத்துமவனை நாம் தேடச் சொன்னோம் என்று சொல்லும். நாம் விரும்பின விக்ரஹத்தைத் தஞ்சமாக அவர் கையிலே காட்டிக்கொடும்' என்றருளிச்செய்ய, இப்படி அருளிச்செய்கிறது ஏதென்ன, 'நமக்கு ஸ்வப்ன த்ருஷ்டமான வ்யக்தி நம்பேரனுக்கு ப்ரத்யக்ஷ ஸித்தமானால் நமக்கு நெஞ்சாறல் தீரும்' என்றருளிச்செய்தார். நம்பியும்—உடனே உணர்ந்தருளி மிகவும் விஸ்மயப்பட்டு, நிர்ஹேதுகமாக நமக்குப் பேறு கிடைப்பதேயென்று போர ப்ரீதராய் எழுந்தருளியிருக்கிற அவ்வளவிலே, ஆளவந்தாரும் அவராய் எழுந்தருள, 'உம்முடைய திருப்பாட்டனார் நிர்ஹேதுகமாக நமக்கு ஸேவை ஸாதித்தருளி தேவரீருக்கு ஒரு வார்த்தை விண்ணப்பம் செய்யச்சொல்லி அருளிச்செய்தாரென்று அவ்வார்த்தையை அருளிச் செய்ய, இது நேரேயாகப் பெற்றதில்லையேயென்று இழவு பட்டருளி, ஸத்வாரகமாகவாகிலும் விஷயீகரிக்கப்பட்ட இதுவே அமையுமென்று ப்ரீதராய் எழுந்தருளியிருக்க, பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தையும் ப்ரஸாதித்து, "உம்முடைய திருப்பாட்டனார் தாம் விரும்பின விஷயம் என்று உம்மை இவ்விக்ரஹத்தைத் தஞ்சமாகப் பற்றியிருக்கச் சொல்லும் என்று நியமித்தருளினார். ஆகையாலே தேவரீரும் இந்தஅவதார ரஹஸ்யத்தைப் பேணி நோக்கிக் கொண்டு போரும்; இவ்யக்திமானைநேரே ஸாக்ஷாத்கரிக்கப் போகிறீர், அவ்யக்திமானாலே இத்தர்ஶனம் நெடுங்காலம் நிலைநிற்கப்போகிறது" என்று அருளிச்செய்தார்.

ஆளவந்தாரும் அப்படியே தர்ஶன ப்ரவர்த்தகராய் எழுந்தருளியிருந்து அவ்விக்ரஹத்தைப் பரமரஹஸ்யமாக பரிவுடனே நோக்கிக்கொண்டு மணக்கால்நம்பி அருளிச் செய்தபடியே 'நாட்டையளித்துய்யச்செய்து நடத்துகிறவனைத் தேடுவதாக உத்யோகித்து ஒருவரையும் அடைவு படக் காணாமையாலே வ்யாகுலாந்த:கரணராய் எழுந்தருளியிருக்க, இளையாழ்வாருடைய வ்ருத்தாந்தங்களைச் சிலர் விண்ணப்பம் செய்யக் கேட்டருளி, பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளினவுடனே, நம்பி முகேந இளையாழ்வாரைக் கண்டு அவருடைய திருநக்ஷத்ரமும்

கேட்டருளி, மூன்றுபடியாலும் ஒத்திருக்கையாலே பூர்ணமாகக் கடாக்ஷித்தருளி, 'ஆமுதல்வனிவன்' என்று ப்ரதிபத்தி பண்ணியருளினார் பின்பு கோயிலேற எழுந்தருளிச் சிலநாள் செல்லத் தம்முடைய சரமதசையையானவாறே திருக்கோட்டியூர் நம்பியை அழைத்தருளி, அந்த விக்ரஹத்தை ப்ரஸாதித்து வரவாறும் அருளிச்செய்து, மற்றுமுண்டான வ்ருத்தாந்தங்களையும் அருளிச்செய்து, நீர் இளையாழ்வாருக்கு நாம் அருளிச்செய்த ரஹஸ்யார்த்தங்களெல்லாம் அருளிச்செய்யுமென்று நியமித்து, அவர் திருநாமத்தாலே தர்சனம் விளங்கப்போகிறது என்றும் ப்ரபன்ன குலமாகப் பேறுபெறும்படி உத்தாரகராகத் திருவவதரித்திருக்கிறார் என்றும் அருளிச்செய்தார். பின்பு ஆஸந்ந சரமதசையையானவாறே, முதலிகளெல்லாரும் சூழவிருந்து, அடியோங்களுக்கு இனி தஞ்சம் ஏதென்று கேட்டருள, "உங்களுக்கு நாம் ஒருவரை உண்டாக்கியன்றோ பேறுபெறப் போகிறோம், உங்களுடைய இழவைத் தீர்த்து நாம் மாத்ரம் அன்றோ இழவோடே போகிறோம்" என்று அருளிச்செய்தார். இப்படி எம்பெருமானார்க்கு முன்புள்ள முதலிகளெல்லாரும் உடையவரிடத்திலே உத்தாரகத்வத்தை அறுதியிட்டார்கள். முன்புள்ளார்க்கு இவர் உத்தாரகராகக் கூடும்படி எங்ஙனேயென்னில், 11 "आस्फोटयन्ति पितरः प्रनृत्यन्ति पितामहाः। वैष्णवो नः कुले जातः स नस्सन्तारयिष्यति॥" (ஆஸ்போடயந்தி பிதர: ப்ரந்ருத்யந்தி பிதாமஹா:। வைஷ்ணவோ ந: குலே ஜாத: ஸ ந: ஸந்தாரயிஷ்யதி ॥) என்று முன்பே லோகாந்தரஸ்தரான பித்ருக்கள் ஸ்வகுலத்திலே ஒருவன் வைஷ்ணவனாகப் பிறந்தால் அவனையே தங்களுக்கு உத்தாரகனாகச் சொல்லக்கடவதிறே. "वैकुण्ठे तु परे लोके" (வைகுண்டே து பரே லோகே) என்று சொல்லப்படுகிற லோகாந்தரஸ்தரான நாதமுனி ப்ரப்ருதிகள் ஸ்வகீயமான ப்ரபந்ந குலத்திலே நித்யஸூரிகளில் தலைவராய் வைஷ்ணவாக்ரேஸரராய் ஒரு மஹாநுபாவன் திருவவதாரம் பண்ணினால், அவரையே தங்களுக்கு உத்தாரகராக நினைத்திருக்கச் சொல்ல வேண்டாவிறே. "பித்ராதிகளுக்கு வைஷ்ணவத்வம்

இல்லாமையாலும், அவர்களுக்கு ப்ராப்யமான தே₃ஶ விஶேஷம் வேறே ஒன்று உண்டாயிருக்கையாலும், உத்தரணுபேக்ஷையுடையவர்களாகையாலும் ஸ்வகுலோத்பன்னனான வைஷ்ணவனை உத்தாரகனாகச் சொல்லக் குறையில்லை. இவர்கள்தாம் வைஷ்ணவாக்₃ரேஸரராகையாலும், ப்ராப்யபூ₄மி கைபுகுந்திருக்குமவர்களாகையாலும், உத்தரணுபேக்ஷாரஹிதராயிருக்கவடுக்குமத்தனை போக்கிக் காலவிப்ரக்ருஷ்டரான இவர் பக்கலிலே ஸ்வோத்தாரகத்வ பு₃த்₃தி₄ பண்ணக்கூடாதே'' என்னில்-அங்ஙனே சொல்லப் படாது. இதுவும் கூடும். எங்ஙனேயென்னில் – நாத₂முனிகளுக்கு ஆழ்வாரிடத்திலே உத்தாரகத்வப்ரதிபத்தி நடக்குமே; அதில் சோத்₃யமில்லையிறே; இனி, நாத₂முனிகள் தமக்கு உத்தாரகமாக ஆழ்வாருடைய திருவடிகளை அறுதியிட்டிருக்கையாலும், ஆழ்வார் தாமும் ப₄விஷ்யதா₃சார்ய விக்₃ரஹத்தைக் காட்டிக் கொடுத்து— 9. ''रामस्य दक्षिणो बाहुः'' (ராமஸ்ய த₃க்ஷிணோ பா₃ஹு:) என்கிறபடியே நம்முடைய அவயவமாக நினைத்திரும். இவ்வ்யக்திக்கடி நாமாகையாலே நமக்கடியுமாயிருக்கும்— என்று உடையவரை ஆழ்வார் தமக்குத் திருவடிகளாக அறுதியிட்டு அன்றே அருளிச்செய்கையாலும், நாத₂முனிகள் ஆழ்வார் ப்ரஸாதி₃த்தவ்யக்தியிலே பரிபூர்ணமாக உத்தாரகத்வத்தை அறுதியிட்டு, உய்யக்கொண்டார்க்கு வெளியிட்டருள, அவர் மணக்கால் நம்பிக்கு வெளியிட்டருள, மணக்கால் நம்பியும் ஆளவந்தாருக்கு வெளியிட்டருள, ஆளவந்தாரும் தம்முடைய ஶ்ரீபாத₃த்தில் முதலிகளில் திருமலை நம்பி, திருக்கோட்டியூர் நம்பி, திருமாலையாண்டான், பெரியநம்பி, திருவரங்கப்பெருமாளரையர் தொடக்கமானார்க்கு வெளியிட்டருள, இவர்களடையத் தந்நிஷ்டராய், இந்த ரஹஸ்ய விஶேஷத்தைத் திருவுள்ளத்திலே கொண்டு, உடையவரோட்டை ஸம்ப₃ந்த₄ம் தங்களுக்கு வேணுமென்று கொண்டு, 'கொடுமின் கொண்மின்'' என்றும், 13. ''तस्मै देयं ततो ग्राह्यम्'' (தஸ்மை தே₃யம் ததோ க்₃ராஹ்யம்) என்றும் சொல்லுகிறபடியே தாங்கள் உடையவர்க்கு ரஹஸ்யார்த்த₂ங்களை உபதே₃ஶித்து

ஆசார்ய வ்யாஜேந ஸம்ப₃ந்த₄ம் பெற்று, தந்தாம் குமாரர்களையும் ஆஶ்ரயிப்பித்து அத்₃வாரகமான ஸம்ப₃ந்த₄த்திலும் ஸத்₃வாரகமான ஸம்ப₃ந்த₄த்தையிறே கனக்க நினைத்திருந்தது. ஸ்வோத்பாத₃க விஷயீகாரக விஷயத்தில் ஸ்வோத்தாரகத்வ ப்ர தி ப த் தி பண்ணியிருந்தார்கள்—என்றபடி. க₄ண்டாகர்ணன் பக்கல் பண்ணின விஷயீகாரம் அவனுடன் பிறந்தவனளவும் சென்றாப்போலவும், ஸ்ரீவிபீ₄ஷணாழ்வான் பக்கல் பண்ணின விஷயீகாரம், கூடச்சென்ற நால்வரளவும் செ ன் ற ப் போ ல வு ம், ஸ்ரீப்ரஹ்லாத₃ாழ்வான் பக்கல் பண்ணின விஷயீகாரம் தத்ஸம்ப₃ந்தி₄களளவும் சென்றாப்போலவும் நினைத்திருந்தார்கள் ப₃ந்த₄மோக்ஷங்களிரண்டுக்கும்ஹேதுவான ப்ரத₂மபர்வ விஷயீகாரம் அப்படிச்செய்தபடி கண்டால், மோக்ஷைக ஹேதுவான சரமபர்வ விஷயீகாரம் இப்படியே செய்யச்சொல்ல வேண்டாவிறே. இவர்களெல்லாரும் இவரிடத்திலே உத்தாரகத்வத்தை அறுதியிட்டிருக்கைக்கு நிதா₃நம் நாத₂முனிகளிறே. உடையவர்க்கு இவர்களாசார்யர்களானது எத்லே அந்வயிக்கிறதென்னில், உபகாரகத்வத்திலே அந்வயிக்குமித்தனையுத்தாரகத்வத்தில்புகாது. ஆசார்யத்வந்தான் உபகாரகத்வேநவும் உத்தாரகத்வேநவும த்₃விவித₄மாயிருக்கும். ஆதில் உபகாரகத்வேந ஆசார்யத்வமே இவர்கள் பக்கலிலுள்ளது. தங்கள் பக்கல் உத்தாரகத்வமுண்டாகில், தந்தாம் குமாரர்களை இங்கு ஆஶ்ரயிப்பிக்கக் கூடாதிறே. தங்கள் பக்கல் உபகாரகத்வமே உள்ளதென்னுமிடத்தை இவ்வழியாலே தோ ற் று வித்தார்கள்,

உத்தாரகத்வந்தான் வ்யக்தித்ரயக₃தமாயிருப்பது, ஈஶ்வரனிடத்திலும், ஆழ்வாரிடத்திலும், உடையவரிடத்திலுமிறேயுள்ளது. உப₄யவிபூ₄திக்கும் கடவனிறே உத்தாரகனுவான். 14. ''अस्या मम च शेषं हि विभूतिरुभयात्मिका'' (அஸ்யா மம ச ஶேஷம் ஹி விபூ₄திருப₄யாத்மிகா) என்று உப₄யவிபூ₄திக்கும் கடவனான ஸ்ரீமான் தானென்னுமிடத்தைத் தானே அருளிச்செய்தான். ஆழ்வார் ''பொன்னுலகாளீரோ புவனிமுழுதாளீரோ'' என்று உப₄யவிபூ₄தியும் தாமிட்ட

வழக்காய் இருக்குமென்னுமிடத்தைத் தாமே அருளிச்செய்தார். பெரியபெருமாள் உப4யவிபூ4தியும் கொடுக்கப்பெற்று உடையவராயிறே இவர். ஆகையாலே இது வ்யவஸ்தி2த விஷயமாயிருக்கும். அவ்யக்தித்ரயத்திலும் உடையவரிடத்திலே உத்தாரகத்வம் உறைத்திருக்கும். ஈஶ்வரன் ஆழ்வாரை இவ்விபூ4தியிலே நெடுநாள் இட்டுவைத்து ஜக3த்தைத் திருத்துவதாக நினைத்தவளவிலே, முப்பத்திரண்டு திருநக்ஷத்ரத்துக்குள்ளே, “கூவிக்கொள்ளும்காலம் இன்னம் குறுகாதோ” என்றும், “எந்நாள் யானுன்னை இனி வந்து கூடுவனே” என்றும், “மங்கவொட்டுன் மாமாயை” என்றும் அறப்பதறி வீடுபெற்றாரிறே. அந்த இழவெல்லாம் தீர உடையவரை நூற்றிருபது திருநக்ஷத்ரமிட்டுவைத்து ஜக3த்தை வாழ்வித்தானிறே; ஆழ்வார் காலத்தில் இல்லாத ஶ்ரீவைஷ்ணவ ஸம்ருத்3தி4 இவர் காலத்திலே பொலிந்ததிறே. இதுக்கு நித3ாநம் உத்தாரகத்வத்தினுடைய உறைப்பாய்த்து. ஆழ்வார்தாமும் “கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல் மலியப்புகுந்து இசை பாடியாடிஉழிதரக்கண்டோம்” என்று நிஶ்சயித்து அருளிச்செய்தாரிறே. ஆகையாலே, இவரே ஸர்வோத்தாரகர். ஆசார்யத்வத்திலே வந்தால் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யத்வத்தையே முக்2யமாகக் கொள்வது இவர் பக்கலிலே யாய்த்து. அநர்த்த2ங்கண்டால் ஆற்றாமையும், மிக்க க்ருபையும் உடையவராயிறே இவரிருப்பது. இதுதான் வ்யவஸ்தி2த விஷயமாகையாலே து3ர்லப4மாயிருக்கும், ஆகையிறே ஆசார்யத்வத்தை ஆசைப்பட்டு ஶ்ரீகீ3தையை உபதே3ஶிக்குமளவிலே 15. “यच्छ्रेयः स्यान्निश्चितं ब्रूहि तन्मे शिष्यस्तेऽहं शाधि मां त्वां प्रपन्नम्” (யச்ச்2ரேயஸ் ஸ்யாந் நிஶ்சிதம் ப்3ரூஹி தந்மே ஶிஷ்யஸ்தேऽஹம் ஶாதி4 மாம் த்வாம் ப்ரபந்நம்) என்று தானும் ஸ்வாநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யனாய், 16. “तद्विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया। उपदेक्ष्यन्ति ते ज्ञानं ज्ञानिनस्तत्त्वदर्शिनः॥” (தத்3வித்3தி4 ப்ரணிபாதேந பரிப்ரஶ்நேந ஸேவயா। உபதே3க்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்வத3ர்ஶிந: ॥) என்று ஸ்வவ்யதிரிக்த விஷயத்திலும் ஸ்வாநுவ்ருத்தி ப்ர

ஸந்நாசார்யத்வத்தைபிறே சொல்லிற்று. ஆகையாலே, ஆழ்வாரிடத்திலும் அவரடியாக வந்த இவரிடத்திலும் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யத்வம் வ்யவஸ்தி2தம்.

இன்னமும் இவருடைய உத்தாரகத்வஸாத4கங்களான ஆசார்ய தி3வ்யஸூக்திகள் பலவும் சொல்லப்படுகிறது. பெரியநம்பி மது4ராந்தகத்து ஏரிகாத்த பெருமாள்கோயில் திருமகிழ் அடியிலே எழுந்தருளியிருந்து 17. ''चक्रादिधारणं पुंसां परसम्बन्धवेदनम्। पतिव्रतानिमित्तं हि वलयादिविभूषणम्॥'' (சக்ராதி3தா4ரணம் பும்ஸாம் பரஸம்ப3ந்த4வேத3நம் ।। பதிவ்ரதாநிமித்தம ஹி வலயாதி3விபூ4ஷணம்॥) என்றும். 18 ''एवं प्रपद्य देवेशं आचार्यः कृपया स्वयम्। अध्यापयेन्मन्त्ररत्नं सर्षिच्छन्दोऽधिदैवतम्॥'' (ஏவம் ப்ரபத்3ய தே3வேஶம் ஆசார்ய: க்ருபயா ஸ்வயம் । அத்4யாபயேந்மந்த்ரரத்நம் ஸர்ஷிச்ச2ந்தோ3தி4தை3வதம்॥) என்றும் சொல்லுகிறபடியே ப4க3வத் ஸம்ப3ந்த4 பூர்வகமாக உடையவர்க்கு த்3வயோபதே3ஶம் பண்ணியருளி, 'நாம் உமக்கு ஆசார்யராகவேணுமென்று பெருமைக்குச் செய்தோமில்லை, ஆளவந்தார் கணிசித்த விஷயமென்று செய்தோமித்தனை. ஆழ்வார் உம்மைக் கடாக்ஷித்து ''கலியும் கெடும் கண்டுகொண்மின்'' என்று அருளிச்செய்தாராகையாலே அப்படிப்பட்ட மஹாநு பா4வனன்றே. இவ்வழியாலே தேவரீரோட்டை ஒரு ஸம்ப3ந்த4ம் வேணுமென்றும் செய்தோமித்தனை. ''வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி விண்முழுதும் உய்யக்கொண்ட வீரன்'' என்றும், 19. ''जनकानां कुले कीर्तिमाहरिष्यति मे सुता'' (ஜநகாநாம் குலே கீர்த்திமாஹரிஷ்யதி மே ஸுதா) என்றும் சொல்லுகிறபடியே, தேவரீர் வந்தவதரிக்கையாலே ப்ரபன்னகுலமாக விளங்கப்போகிறது; தேவரீரே ஸர்வோத்தாரகர். அடியேன் ரஹஸ்யத்திலே நினைத்திருப்பதும் அப்படியே' என்றருளிச்செய்தார் இவ் வார்த்தை ஸம்ப்ரதா3யமென்று பிள்ளையருளிச்செய்வர்,

பெரியதிருமலைநம்பி திருமாளிகையிலே உடையவர் ஒரு ஸம்வத்ஸரம் எழுந்தருளியிருந்து இதிஹாஸ ஶ்ரேஷ்ட

மான ஸ்ரீராமாயணம் நம்பி பக்கலிலே கேட்டருளுகிறவளவிலே 20. ''यश्च रामं न पश्येत्तु'' (யஶ்ச ராமம் நபஶ்யேத்து) என்கிற ச்லோகம் வந்தவாறே ஸ்வக₃தஸ்வீகார பரக₃த ஸ்வீகாரங்களிரண்டுமன்றியிலே தானும் பிறரும் தன்னை இகழும்படி வர்த்திக்கிற சேதனனுக்குத் தஞ்சமேதென்று கேட்டருளினவளவிலே, ''நித்யஸூரிகளில் தலைவரான தேவரீருடைய அபி₄மானமே அமோகோ₄த்தாரகம்'' என்று அருளிச்செய்தார். பின்பு எம்பாரை உத₃கபூர்வகமாக உடையவர்க்கு ஸமர்ப்பித்து, ''நீர் உடையவரை நம்மிலும் அதி₄கராக நினைத்திரும்; அவர் திருவடிகளே தஞ்சம்; அவர் ஸர்வோத்தாரகராகத் திருவவதரித்தவர். ஆகையாலே இவரோட்டை ஸம்ப₃ந்த₄ம் நேராகப் பெற்றதில்லையென்று ஸ்ரீராமாயண வ்யாஜத்தாலே ஒரு ஸம்ப₃ந்த₄ம் பெற்றோம். ஆளவந்தாரும் இழவோடே எழுந்தருளும்படிகாணும் இவருடைய ஏற்றமிருப்பது. இந்த மஹாநுபா₄வனோட்டை ஸம்ப₃ந்த₄த்தாலே நீரும் நிழலுமடிதாறுமாயிரும்'' என்றருளிச்செய்தார். இதுவும் ஸம்ப்ரதா₃யம்.

திருக்கோட்டியூரிலே உடையவர் எழுந்தருளி நம்பி பக்கலிலே சரமஶ்லோகம் கேட்கிறபோது, தஞ்சமான அர்த்த₂விஶேஷங்களையெல்லாம் அருளிச்செய்து, ''தேவரீரைப் பலகாலும் துவளப்பண்ணினத்தைத் திருவுள்ளத்திலே கொள்ளாதேகிடீர். அர்த்த₂த்தின் சீர்மையை வெளியிடவேண்டிச் செய்தோமித்தனை. தேவரீர் லோக ஸம்ரக்ஷணார்த்த₂மாகத் திருவவதரித்தருளிற்று. நாத₂முனிகளுக்குத் தஞ்சமான விஷயம் தேவரீர். இப்படிப்பட்ட மஹாநுபா₄வனோட்டை ஸம்ப₃ந்த₄முண்டாகப் பெற்றோமென்று மார்பிலே கைபொகட்டு உறங்கலாம்படிக்கு உடலாயிருக்கிறது. எங்களாசார்யரான ஆளவந்தார் ஸ்ரீபாத₃த்திலே ஆஶ்ரயித்த முதலிகளிலே இத்த₃ர்ஶநத்தை நிர்வஹிக்க ஆளுண்டாயிருக்கவும், தேவரீரே த₃ர்ஶநப்ரவர்த்தகராக வேணுமென்று பேரருளாளன் ஸன்னிதி₄யிலே ப்ரபத்தி பண்ணியருளித் திருநாட்டுக்கெழுந்தருளுகிறபோது, 'இந்த மஹாநுபா₄வனோடே நாலு நாளாகிலும்

கலந்து பரிமாறப் பெற்றோமில்லையே' என்று இழவோடே எழுந்தருளினார். ஆகையாலே இத்தர்ஶநம் எம்பெருமானார் தர்ஶநமென்று தேவரீர் திருநாமத்தினால் நாள் தோறும் கொழுந்துவிட்டு விளங்கப்போகிறது'' என்று அருளிச்செய்தார்.

திருக்கோட்டியூர் நம்பி நியோகத்தாலே உடையவர் திருமாலையாண்டான் பக்கலிலே திருவாய்மொழி நடத்தா நிற்க, இடையிலே ஒரு அர்த்த வ்யத்யாஸத்தாலே வ்யாக்யானம் நடத்தாமல் தவிர, இத்தைத் திருக்கோட்டியூர் நம்பி கேட்டருளிக் கோயிலேற எழுந்தருளினவளவிலே திருமாலையாண்டானையழைத்தருளி, ''நீரிவருக்கு அஜ்ஞாத ஜ்ஞாபனம் பண்ணுகிறோமென்று இராதேகொள்ளும். இவர்க்கு ஆளவந்தார்க்குத் தோற்றின அர்த்தமொழிய விபரீதார்த்தம் தோற்றாது. ஸாந்தீபநி பக்கலிலே க்ருஷ்ணன் வேதாத்யயநம் பண்ணினாப்போலே காணும் உம்முடைய பக்கலிலே இவர் திருவாய்மொழி கேட்கிறது'' என்றருளிச்செய்து, விட்ட தருவாய் தொடங்கி உடையவர் மடத்திலே திருக்கோட்டியூர் நம்பியும், திருமாலையாண்டானும், பெரியநம்பியும் கூட எழுந்தருளியிருந்து திருவாய்மொழி வ்யாக்யானம் நடத்துவியாநிற்க, ''பொலிக பொலிக'' வந்தவாறே, ''கலியும் கெடும்'' என்கிற விடத்திலே நம்பியும் உடையவரை ஏறவும் இறங்கவும் பார்க்க, உடையவர் அத்தைக்கண்டருளி இதுக்குப்பொருளேதென்று கேட்க, ''தேவரீர் திருவவதரித்து இதினுடைய அர்த்தத்தை வெளியிட்டுக்கொண்டு எழுந்தருளியிருக்கச் செய்தே கேட்கவேணுமோ? ப்ரபன்ன குலோத்தாரகரான தேவரீரே இதுக்குப் பொருள்; அஸ்மதாதிகளைக் கரையேற்றுகைக்காகவன்றோ நித்யவிபூதியில் நின்றும் இங்கே எழுந்தருளிற்று'' என்று அருளிச்செய்தார். இத்தைக் கேட்டிருந்த திருமாலையாண்டானும், ஹர்ஷபுளகிதகாத்ரராய், ''இனி நான் ஆளவந்தாரை அறியேன்; எல்லாப் பேறும் தேவரீரே; தேவரீரோடு உண்டான ஸம்பந்தமே அடியேனுடைய பேற்றுக்கு ஸாதனம்'' என்றருளிச் செய்தார்.

உடையவர், ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர் பக்கலிலே சென்று ஸ்வாநுவர்த்தனத்தாலே அவரை உகப்பித்துப் பரமரஹஸ்யமான சரமோபாயத்தைப் பெற்று ப்ரீதராய் எழுந்தருளியிருக்க. அவ்வளவிலே உடையவரை அழைத்தருளி, ''நாம் உமக்குச் சரமோபாய ரஹஸ்யத்தைச் சொன்னோமேயாகிலும் இது முக்₂யமாக விலைச்செல்லுகிறது உம்முடைய பக்கலிலேதானே'' என்றருளிச் செய்தார். ''இதுக்கு நித₃ானம் நாத₂முனிகளாகையாலே நீரே ஸர்வோத்தாரகராகக் குறையில்லை'' என்றும் அருளிச்செய்தார்.

இப்படி ஐவரும் கூடி உடையவர்க்கு ஆசார்யர்களாக இருந்தார்களேயாகிலும், தாங்கள் தஞ்சமாக அறுதியிட்டிருப்பது உடையவரிடத்தில் உத்தாரகத்வத்தையிறே. திருக்கோட்டியூர் நம்பி தம் குமாரத்தியாரை உடையவர் திருவடிகளிலே ஆஶ்ரயிப்பித்தவளவிலே, உடையவர் அப்பெண்பிள்ளையை ஏகாந்தத்திலே அழைத்தருளித் தம் திருவடிகளிரண்டையும் காட்டி, ''பெண்ணே! இத்தையே தஞ்சமாக நினைத்திரு'' என்றருளிச்செய்தார். அந்தப் பெண்ணும், '''மேவினேனவன் பொன்னடி மெய்ம்மையே' என்று, தேவரீர் எங்கே எழுந்தருளியிருந்தாலும், அடியேனுக்கு தேவரீருடைய திருவடிகளே தஞ்சம்; தேவரீருக்கு ஆசார்யரான எங்கள் அய்யர் நினைத்திருக்கும்படி கண்டால் தேவரீருக்கு அநந்யார்ஹஶேஷபூ₄தையான அடியேன் நினைத்திருக்கச் சொல்லவேணுமோ?'' என்று சொன்னாளாகப் பிள்ளை அருளிச்செய்வர். திருக்கோட்டியூர் நம்பி தம்முடைய அந்திமத₃ஶையிலே குமாரத்தியாரை அழைத்தருளி, ''பெண்ணே! நம் ப்ரயாணத்தில் நீ நினைத்திருப்பது என்?'' என்ன, ''அய்யரே! எங்களாசார்யரான எம்பெருமானாரோடு உண்டான ஸம்ப₃ந்த₄த்தாலே தேவரீருக்குப் பேறு முற்படப் பெற்றதே என்று நினைத்திருக்கின்றேன்'' என்ன, அவரும், ''வளர்த்ததனால் பயன் பெற்றேன்'' என்று அப்பெண்பிள்ளையை அழைத்தருளி, ஆளவந்தார் ப்ரஸாத₃லப்₄த₄மான விக்₃ரஹத்தை ஸாதித்து உள்ளிற்கருத்தும்

வெளியாம்படி 'எம்பெருமானார் திருவடிகளே ஶரணம்' என்று திருநாட்டுக்கெழுந்தருளினார். இத்தால் எம்பெருமானாரிடத்திலே நிஸ்ஸம்ஶயமாக உத்தாரகத்வத்தை அறுதியிட்டார் என்னுமிடம் ஸித்₃த₄மாயிற்றதிறே.

திருக்கச்சி நம்பி ஒரு நாள் ராத்ரிகாலத்திலே பேரருளாளர் ஸந்நிதி₄யிலே நெடும்போது திருவாலவட்டம் பரிமாற, 'நம்பி! ஒன்று சொல்லுவாரைப்போலே இரா நின்றீர்; என்?' என்ன, "நாயிந்தே! இளையாழ்வார், 'சில நினைவுகள் நினைத்தேன்; அவை எவை என்று தேவரீரிடத்திலே கேட்டுவந்து சொல்லவேணும்' என்றார், அவற்றை அருளிச்செய்யவேணும்" என்ன; "வாரீர்! அவர் அறியாததோ நாம் சொல்லப்போகிறது. ஸாந்தீ₃பனி பக்கலிலே நாம் அத்₄யயனம் பண்ணினாப்போலே காணும் அவர் இருக்கும்படி. ஸகலஶாஸ்த்ரங்களும் ஸகலோபாயங்களும் அறிந்த ஸாரவித்தமராய், நம் முதன்மையிலே அடிமை செய்வாரில் தலைவராய், தம் பக்கலிலே ஸகலார்த்த₂ங்களும் கேட்டு நாடடங்க வாழவேண்டியிருக்க, நாமொன்று சொல்லக் கிடக்கிறதோ? பின்னையும் உம்மை விடுவித்துக் கேட்கிறாரித்தனை" என்றருளிச்செய்தார்.

"உடையவர், பெரியநம்பி தொடக்கமான ஐவர்களுக்கும் ஶிஷ்யராய், அவர்கள் ஆசார்யர்களாயிருக்க, ஶிஷ்யரான இவரோட்டை ஸம்ப₃ந்த₄த்தாலே அவர்கள் பேறு பெற்றார்கள் என்று சொல்லும்படி எங்ஙனே? ஆசார்ய ஸம்ப₃ந்த₄த்தாலேயன்றோ ஶிஷ்யனுக்குப் பேறு" என்னில்- த₃ஶரத₂வஸுதே₃வாதி₃களிடத்திலே பிறந்தராமக்ருஷ்ணாதி₃கள் வித்₃யாப்₄யாஸத்துக்குடலாக விஶ்வாமித்ரஸாந்தீ₃பனீ ப்ரப்₄ருதிகளை ஆசார்யத்வேந வரித்து. 21. "किंकरौ समुपस्थितौ" (கிங்கரௌ ஸமுபஸ்தி₂தௌ) என்றும், 22. "तवाहं दासभूतोऽस्मि किमद्य करवाणि ते" (தவாஹம் தா₃ஸபூ₄தோऽஸ்மி கிமத்₃ய கரவாணி தே) என்றும் இத்யாதி₃களில் சொல்லுகிறபடியே தாங்கள் ஶிஷ்யராய் நின்றவிடத்தில் ஶிஷ்ய ஸம்ப₃ந்த₄த்தாலே உபதே₃ஶகத்வேந நின்று குருக்களான

விஶ்வாமித்ராதிகளுக்குப் பேறுபோலே. ஶிஷ்யரான இவரோடுண்டான ஸம்பந்தத்தாலே ஆசார்யர்களான பெரியநம்பி தொடக்கமானோர்க்கும் பேறாகக் குறையில்லை. 23 विष्णुर्मानुषरूपेण चचार वसुधातले" (விஷ்ணுர் மாநுஷரூபேண சசார வஸுதாதலே) என்றும், 24 "इदानीमपि गोविन्द लोकानां हितकाम्यया। मानुषं वपुरास्थाय द्वारवत्यां हि तिष्ठसि॥" (இதாநீமபி கோவிந்த லோகாநாம் ஹிதகாம்யயா। மாநுஷம் வபுராஸ்தாய த்வாரவத்யாம் ஹி திஷ்டஸி।" என்றும் சொல்லுகிறபடியே ஸாக்ஷாத் ஸர்வேஶ்வரன் தானே மாநுஷரூபத்தை ஏறிட்டுக்கொண்டு ஶிஷ்யத்வபாவநா மாத்ரமாய், தன்னில் தானான தன்மையாயிருக்கையாலே அவர்களும் அடியறிந்தவர்களாகையாலே, உபதேஷ்ட்ருத்வபாவனையொழிய வஸ்துத: அஜ்ஞாதஜ்ஞாபனத்வாரா குருத்வம் தங்களுக்கு இல்லாமையாலே அவர்களுக்குப் பேறு அவராலேயாகக் குறையில்லை. இங்கு அப்படிக் கூடாதே-என்னில் இங்கும் கூடும். எங்ஙனேயென்னில்- 25. "आचार्यस्स हरिस्साक्षात् चरूपी न संशयः" (ஆசார்யஸ்ஸ ஹரிஸ்ஸாக்ஷாத் சரரூபீ ந ஸம்ஶய:) என்றும், 26 "गुरुरेव परं ब्रह्म" (குருரேவ பரம் ப்ரஹ்ம) என்றும், "பீதக வாடைப் பிரானார் பிரமகுருவாகி வந்து" என்றும், "திருமாமகன் கொழுநன் தானே குருவாகி" என்றும் இத்யாதிகளில் சொல்லுகிறபடி உடையவரும் அவதார விஶேஷமாகையாலும், பெரியநம்பி தொடக்கமானோர் இவர்க்கு அஜ்ஞாதஜ்ஞாபனத்வாரா ஆசார்யர்களன்றிக்கே இவரோடே நமக்கொரு ஸம்பந்தம் உண்டாகவேணுமென்னுமதிலே நோக்காய் ஆசார்யத்வத்தை வ்யாஜமாக நினைத்திருக்கையாலும் நாதமுனிகளுடைய ஸம்ப்ரதாய ஶ்ரவணத்தாலும் பேற்றுக்கு உடலாக உத்தாரகத்வத்தை இவரிடத்திலே அறுதியிட்டிருந்தார்கள். ப்ரதமகுருவான எம்பெருமானுக்கும் இவர் உத்தாரகரானபடி கண்டால், அவாந்தர குருக்களுக்கு இவர் உத்தாரகராகச் சொல்ல வேண்டாவிறே. உத்தாரகராகையாவது— ஸ்வரூபஸ்தபாவம் அழிந்து அத:பதிதனானவனை ஸ்வரூபஸ்தபாவத்தை

உண்டாக்கிக் கரைமரம் சேர்க்கையிறே. பா₃ஹ்ய குத்₃ருஷ்டிகள் ப்₃ரஹ்மஸ்வரூபத்தை இல்லைசெய்ய, அத்தாலே ஸ்வரூபஸித்₃தி₄யில்லாமல் அத₄:பதிதனைவனை விலே ஸகல வேதா₃ந்தங்களாலும் பரப்₃ரஹ்மத்தை ஸ்வரூப ஸித்₃தி₄யுண்டாக்கிக் கரைமரம் சேர்த்தாரிறே. இன்னமும் 27. ''गोपालो यादवं वंशं स्वय(मग्न)मभ्युद्धरिष्यति''(கோ₃பாலோ யாத₃வம் வம்ஶம் ஸ்வயம் (மக்₃நம) அப்₄யுத்₃த₄ரிஷ்யதி, என்று நாரத₃ப₄க₃வான் க்ருஷ்ணாவதாரத்தைக கடாக்ஷித்து யது₃வம்ஶத்தை ஒரு கோ₃பாலன் வந்து உத்₃த₄ரிக்கப் போகிறானென்று சொன்னாப்போலே, ப்ரபன்னஜனகூடஸ்த₂ரான ஆழ்வாரும் உடையவருடைய திருவவதாரதக் கடாக்ஷித்து, 'கலியுப் கெடும் கண்டு கொண்மின்'' என்று ஒரு மஹானுபா₄வன் திருவவதரித்து ப்ரபன்னகுலமாக வாழும்படிக்கு ஸ்ரீ வை ஷ் ண வ ஸ்ரீ கொழுந்துவிட்டுச் செல்லும்படி பண்ணப்போகிறாரென்று அருளிச்செய்தாரிறே, ஆகையாலே, ஆளவந்தார் தொடக்கமான முன்புள்ள முதலிகள் பலரும் த₃ர்ஶந ப்ரவர்த்தகராயிருக் , இங்கும் அங்கும் இவர் திருநாமத்தாலே த₃ர்ஶநம் பேறு பெற்று- எழுபத்துநாலு ஸிம்ஹாஸனஸ்த₂ரும், ஜ்ஞாநாதி₄கரான ஸந்யாஸிகளும், ஸ்ரீவைஷ்ணவர்களும், ஏகாங்கிகளும், ஜ்ஞாநாதி₄கைகளான அம்மையார்களும் நிரவதி₄க வைஷ்ணவ ஸ்ரீயோடே வாழ்ந்தது. அந்த ஸம்ருத்₃தி₄ இன்றளவும் வெள்ளமிட்டுப் பெருகும்படி ராமானுஜ த₃ர்ஶந மென்று கொழுந்துவிட்டுச் செல்லுகிறது.

ஸர்வேஶ்வரன் க்ருஷ்ணாவதாரத்திலே அர்ஜுனவ்யாஜத்தாலே ஸ்வவிஷயமான சரமஶ்லோக முக₂த்தாலே ப்ரத₂மோபாயத்தை நிஶ்சயித்துக் காட்டினாப்போலே, உடையவரும் அவதார விஶேஷமான தம்பக்கலிலே சரமோபாயத்தை நிஶ்சயித்து அருளிச்செய்தாரிறே. எங்ஙனேயென்னில்; திருநாராயணபுரத்திலே உடையவர் முதலிகளும் தாமுமாக எழுந்தருளியிருக்கிறநாளிலே முதலியாண்டான் யாத₃வகி₃ரி மாஹாத்ம்யம் வாசியாநிற்க, 28. अनन्तः प्रथमं रूपं लक्ष्मणश्च ततः परम् । बलभद्रस्तृतीयस्तु कलौ कश्चिद्भविष्यति।''

(அநந்த: ப்ரத₂மம் ரூபம் லக்ஷ்மணஶ்ச தத: பரம் | ப₃லப₄த்₃ரஸ் த்ருதீயஸ்து கலௌ கஶ்சித்₃ ப₄விஷ்யதி ||) என்கிற ஶ்லோகம் வந்தவாறே சதுர்த்த₂பாத₃த்துக்குப் பொருள் ஏதென்று சில முதலிகள் முதலியாண்டானைக் கேட்க, அவரும் உடையவர் திருமுக₂மண்ட₃லத்தைப் பார்க்க, உடையவரும், 'ஆழ்வாரை அபேக்ஷித்து ருஷி சொன்னதாயிருக்கும்' என்று அருளிச்செய்ய, அதிலே முதலிகளுக்கு த்ருப்தியில்லாதபடியைக்கண்டு ''இற்றைக்குச் சொல்லும்; பின்னை வெளியிடுகிறோம்'' என்றருளிச்செய்ய, அவ்வளவிலே மாஹாத்ம்யத்தை முட்ட வாசித்துக்கட்டி, கோ₃ஷ்டி₂யும் குலைந்துபோய் அன்று ராத்ரி காலத்திலே முதலியாண்டான், எம்பார், திருநாராயணபுரத்தரையர், மாருதியாண்டான், உக்கலம்மாள் இவர்கள் ஐவர்களும் உடையவர் திருவடிகளிலே த₃ண்ட₃ம் ஸமர்ப்பித்து, 'தேவரீர் அடியோங்களுக்கு அவ்வர்த்த₂த்தை அருளிச்செய்யவேணும்' என்ன, ''ஆகில் இத்தை ஒருவர்க்கும் வெளியிடாதே கிடீர்கள், இதிலே ப்ரதிபத்தி பிறக்கிறது மிகவும் து₃ர்லப₄மாயிருக்கும்'' என்றருளிச்செய்து,''28. 'कलौ कश्चिद्भविष्यति' (கலௌ கஶ்சித் ப₄விஷ்யதி) என்றதுக்கு நாமே விஷயம்; நம் பிறவி ஸர்வோத்தாரகமாகப் பிறந்த பிறவியாயிருக்கும். ஆகையாலே எல்லாரும் நம்மைப் பற்றி நிர்ப்ப₄ரராய் இருங்கோள்; ஒரு குறைகளுமில்லை'' என்றருளிச்செய்தார். இவ்வர்த்த₂ம் பரமரஹஸ்யம்.

உடையவர்தாம் அவதார விஶேஷமென்னுமிடத்தைப் பலரும் வெளியிட்டார்களிறே. | எங்ஙனேயென்னில்-அழகர் ஸன்னிதி₄யிலே திருவத்₄யயனம் நடவாநிற்க, ஒருநாள் திருவோலக்கத்திலே 'நம்மிராமாநுசமுடையார்க்கு அருளப்பாடு' என்று திருவுள்ளமாய் அருள, 'நாயிந்தே' என்று முதலிகளெல்லாம் எழுந்திருந்து, அழகர் திருவடிகளுக்கு ஆஸன்னமாக எழுந்தருள், பெரியநம்பி வழியிலே சிலர் எழுந்திருந்து வாராமலிருக்க, 'நாமழைக்க நீங்கள் வாராமலிருப்பானேன்' என்ன, ''இராமாநுசமுடையார்க்கு அருளப்பாடென்று தேவரீர் திருவுள்ளம்பற்றுகையாலே

அவர் எங்களுக்கு ஶிஷ்யராய் இருக்கையாலே, அவர் எங்களுக்கு ஶேஷபூதரன்றோ என்று வாராமலிருந்தோம்'' என்ன அவரும் ''நம்மை தாஶரதிவஸுதேவாதிகள் புத்ரப்ரதிபத்தி பண்ணினாப்போலே இருந்தது நீங்கள் நம் இராமாநுசனை ஶிஷ்யப்ரதிபத்தி பண்ணினது. நம் முதன்மையிலே அடிமை செய்வாரில் தலைவரான இவரோட்டை ஸம்பந்தத்தை அறுத்துக்கொண்ட உங்களுக்கு கதி ஏது?'' என்று அருளிச்செய்தார். பின்பொரு நாள் கிடாம்பியாச்சானை அழைத்து அருளப்பாடிட்டருளி, ஒரு பாசுரம் சொல்லிக் காணாயென்ன, அவரும், 29. ''न धर्मनिष्ठोऽस्मि''(ந தர்மநிஷ்டோஸ்மி) என்று தொடங்கி 29. ''अकिञ्चनोऽनन्यगतिश्शरण्य त्वत्पादमूलं शरणं प्रपद्ये'' (அகிஞ்சநோ஽நந்யகதிஶ்ஶரண்ய த்வத்பாதமூலம் ஶரணம் ப்ரபத்யே) என்றருளிச்செய்ய, ''நம்மிராமாநுசனையுடையையாய் வைத்து அநந்யகதி என்று சொல்லப்பெறாய் காண்'' என்றருளிச்செய்தார். அதாவது- ''எல்லார்க்கும் புகலிடமாய், ஸர்வோத்தாரகரான நம்மிராமாநுசனிருக்கச் செய்தே உமக்கு ஒரு குறைகளுமில்லை. மார்விலே கைபொகட்டு உறங்கும்'' என்றருளிச்செய்தார் என்றபடி.

பெருமாள்கோயிலிலே ஒரு வைஷ்ணவனுக்கு ஒரு பிள்ளை பிறந்தானாய், அந்தப் பிள்ளை ஐந்து ஆறு வயஸ்ஸளவும் வார்த்தை சொல்லாமல் ஊமையாயிருந்து, அநந்தரம் இரண்டு மூன்று ஸம்வத்ஸரம் அவனைக் காணாமல் போக, சில நாளைக்குப் பின்பு அவன் வார்த்தை சொல்ல வல்லனாய் வந்தவாறே, இந்த ஆஶ்சர்யத்தைக்கேட்கைக்கு 'ஊமாய்! நீ இத்தனை நாளும் எங்கு போனாய்?' என்று சிலர் கேட்க, அவனும் 'க்ஷீராப்திக்குப் போனேன்' என்ன, அங்கே விஶேஷமேதென்று கேட்க, ''திருப்பாற்கடல் நாதன் ஸேனைமுதலியாரையழைத்தருளி, 'எல்லாரும் நமக்காளாம்படி நீர்போய் அவதரித்து ஜகத்தையடையத் திருத்தும்?' என்று நியோகிக்க, அப்படியே ஸேனை முதலியாரும் இளையாழ்வாராய் வந்தவதரித்திருக்கிறாரென்று திருப்பாற்கடல் நாதன் ஸன்னிதியிலே ஶ்வேதத்வீப

வாஸிகள் ப்ரஸங்கமும் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்'' என்று சொல்லி உடனே அந்தப்பிள்ளை அந்தர்த்தாநம் பண்ணிப் போயிற்று.

உடையவர் யாதவப்ரகாசனோடே ஶாஸ்த்ரபாடமும் காலக்ஷேபம் பண்ணிக்கொண்டிருக்கிற நாளிலே, அந்த ராஜ்யத்து ராஜாவினுடைய பெண்ணை ப்ரஹ்மரக்ஷஸ்ஸு பிடித்து நலிய, அத்தை யாதவப்ரகாசனுக்கு அறிவிக்கப் பண்ண, அவனும் அதிக்ரூரமான மந்த்ரங்களை ஜபித்துக் கொண்டு இளையாழ்வார் தொடக்கமானாருடனே சென்று அத்தைப் போகச்சொல்ல, அது முடக்கின காலைநீட்டி, ''நீ போகச்சொன்னால் உனக்கு பயப்பட்டுப் போகேன்'' என்று சில வார்த்தைகள் சொல்ல, ''ஆனால், நீயார் போகச் சொன்னால் போவுதி?'' என்ன, ''உன்னுடனே வாசிக்கிற வர்களிலே ஒருவர் அநந்தகருடவிஷ்வக்ஸேநாதிகளான நித்யஸூரிகளில் தலைவரிலே ஒருவராயிருப்பார்'' என்று உடையவரைக் காட்டி, ''அவர் போகச்சொன்னால் அவர் திருவடிகளிலே தண்டனிட்டுப் போகிறேன்'' என்று சொல்லுகையாலே, உடையவர் அவதார விஶேஷமென்னு மிடத்தை ப்ரஹ்மரக்ஷஸ்ஸும் வெளியிட்டதிறே.

உடையவரும் ஶாரதா பீடத்துக்கு எழுந்தருளின வளவிலே ஸரஸ்வதியும் எதிரே புறப்பட்டு வந்து, ''இவர் ஸர்வேஶ்வரனுடைய அம்ஶாவதாரமே; தப்பாது'' என்று சொல்லி அதிப்ரீதியோடே, 30. ''कप्यासं पुण्डरीकमेवमक्षिणी'' (கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ) என்கிற ஶ்ருதி வாக்யத்துக்கு அர்த்தமும் அருளிச்செய்யவேணுமென்று உடைய வரைக் கேட்க, உடையவரும், ''ஸ்ரீமந் நாராயணனுக்கு அப்போதலர்ந்த செந்தாமரைப் பூப்போலேயிருக்கும் திருக் கண்கள்'' என்று அருளிச்செய்ய, ஸரஸ்வதியும் கேட்டு மிகவும் ஸந்தோஷித்து ''அவதார விஶேஷமான தேவரீர் நூற்றுக்காத வழி எழுந்தருளினது அடியேனைக் கடாக்ஷிக் கைக்காக எழுந்தருளிற்றே'' என்று ஸ்ரீபாஷ்யம் முதலான க்ரந்தங்களையும் ஶிரஸாவஹித்து உடையவருக்கு பாஷ்ய

காரரென்று திருநாமம் சாத்தி, உடையவருடைய அவதார ரஹஸ்யத்தை ஸரஸ்வதியும் வெளியிட்டாளிறே.

கூரத்தாழ்வானும்—உடையவருடைய நியோகத்தாலே பேரருளாளன் விஷயமாக வரதராஜஸ்தவம் அருளிச்செய்து நிறைவேற்றினவுடனே, ஆழ்வானும் உடையவர் ஸந்நிதியிலே ஸமர்ப்பித்து, 'தேவரீருடைய நியமன ப்ரகாரத்திலே வரதராஜஸ்தவத்தை தேவப்பெருமாள் திருமுன்பே விண்ணப்பம் செய்தேன். திருவுள்ளமுகந்து அவர் பெருவிசும்பருளும் பேரருளாளராகையாலே அடியேன் கேட்டபடியே, 12. "वैकुण्ठे तु परे लोके श्रिया सार्धं जगत्पतिः। आस्ते विष्णुरचिन्त्यात्मा भक्तैर्भागवतैस्सह ॥" (வைகுண்டே து பரே லோகே ஸ்ரீயா ஸார்த்தம் ஜகத்பதி: । ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர் பாகவதைஸ் ஸஹ ||) என்று சொல்லுகிற பரமபதத்தை ப்ரஸாதித்தோமென்று அருளிச்செய்து, 'நாம் *வானிளவரசாகையாலே நமக்கு ஸ்வாதந்த்ர்யம் மட்டமாயிருக்கும்; நம் முதன்மையிலே அடிமை செய்வாரில் தலைவரிலே ஒருத்தரான நம்மிராமாநுசனை அநுமதிகொண்டு அவர் தந்தோமென்றால் போய்வாரும்' என்றருளிச்செய்தார். அப்படியே தேவரீரும் திருவுள்ளம் பற்றியருளவேணும்' என்று விண்ணப்பம் செய்ய, உடையவரும், ஆழ்வான் திருவுள்ளத்தையறிந்து அவருடைய வலத்திருச்செவியிலே த்வயத்தையும் ப்ரஸாதித்தருளி, "நலமந்தமில்லதோர் நாடு புகுவீர்" என்றருளிச்செய்ய, ஆழ்வானும் 'நான்பெற்ற பேறு நாலூரானும் பெற வேணும்' என்று விண்ணப்பம்செய்ய, "க்ருஷ்ணன் கண்டாகர்ணன் பக்கல் பண்ணின விஷயீகாரம் அவனுடன் பிறந்தவனளவும் சென்றாப்போலே, நாமும்முடைய பக்கல் பண்ணின விஷயீகாரம் நாலூரானளவும் செல்லத் தட்டில்லை காணும்" என்று அருளிச்செய்தார். பின்பிறே *கலங்காப்பெருநகரை ப்ராபித்தது.

ஆழ்வானுக்கு பட்டரைக்கொண்டு திருவத்யயன பர்யந்தம் நடத்தி, மற்றைநாள் உடையவர் பட்டரையும் கூட்டிக்கொண்டு பெரியபெருமாளை ஸேவிப்பதாக எழுந்

தருள. அவ்வளவிலே பெருமாளும் பட்டரை அருளப் பாடிட்டருளி, "உமக்குப் பிதா போனாரென்று வ்யாகுலப் படாநின்றீர்; நாமுமக்குப் பிதா" என்று பட்டரை புத்ரஸ்வீகாரம் பண்ணியருளி, "நீர் ஒன்றுக்கும் கரையாதே கொள்ளும் காணும். த்ருஷ்டத்தில் உமக்கு ஒரு குறை களும் வையோம்; அத்ருஷ்டத்துக்கு நம் இராமாநுச னிருக்கக் கரையவேண்டுவதில்லை. 'நம் பரமாயதுண்டே' என்று துணிந்திரும்" என்று அருளிச்செய்தார்.

உடையவர், முதலிகளும் தாமுமாக திவ்யதேசங்க ளெல்லாம் ஸேவித்துத் திருநகரியிலே எழுந்தருளி ஆழ்வாரை ஸேவித்துக் கண்ணிநுண்சிறுத்தாம்பு அநுஸந் தாநம் பண்ணிக்கொண்டு நிற்க; ஆழ்வாரும் மிகவும் உகந் தருளி அர்ச்சகமுகேந அருளப்பாடிட்டருளி' உடைய வரைத் திருவடிகளின் கீழே திருமுடியை மடுக்கச்சொல்லி ஸகலமான ஸ்ரீவைஷ்ணவர்களையும் கோயில் பரிகரம் அனைத்துக்கொத்தையும் அருளப்பாடிட்டருளி, "நம்மோடு ஸம்பந்தம் வேண்டியிருப்பாரெல்லாரும் நமக்குப் பாதுக மாயிருக்கும் நம்மிராமாநுசனைப் பற்றுங்கோள். நம்மிராமா நுசனைப் பற்றுகை நம்மைப் பற்றுகையாயிருக்கும். நம் இராமாநுசனையே நீங்களனைவரும் உடையராய்ப் பிழையுங் கோள்" என்றருளிச்செய்தார். அன்று தொடங்கி ஆழ்வார் திருவடிகளுக்கு 'இராமாநுசம்' என்று திருநாமம் ஆயிற்று. தத்பூர்வம் ஶடகோபபதத்வயம் மதுரகவிகள் என்று திருநாமமாயிருக்கும். இந்த ஸம்ப்ரதாயத்தை உட்கொண்டாயிற்று அமுதனார் "மாறனடிபணிந்துய்ந் தவன்" என்று அருளிச்செய்தது.

மதுரகவியாழ்வார் ஸர்வஜ்ஞராகையாலே ஆழ்வார் திருவுள்ளக் கருத்தை அறிந்து "மேவினேனவன் பொன்னடி" என்று ஸாபிப்ராயமாக அருளிச்செய்தா ரிறே. தாமரையடி என்னாதே பொன்னடி என்று விஶே ஷணமிட்டது — பொன்னானது ஸகல த்ரவ்யங்களிலும் உத்க்ருஷ்டமாய், எல்லாரும் ;மேல்விழுந்து ஆசைப்படும்படி யுமாய், பலப்ரஸாதகமுமாய், ப்ராயிக(ப்ய?)முமாய், வ்யக்தி

தாரதம்யத்தையிட்டு வர்த்தியாமல் தன் பக்கல் ருசியுள்ளாரிடமெல்லாம் வர்த்திக்கும்படியுமாய், ஆண்களோடு பெண்களோடு வாசியறத் தொடரும்படியுமாய், கைப்பட்டால் நோக்கிக்கொள்ள வேண்டும்படியுமாய், இழவிலே ப்ராணஹானி வருகைக்கு உடலுமாய் இருக்கையாலேயிறே. இந்த ஆகாரங்களெல்லாம் உடையவர் பக்கலிலே கண்டதிறே. உடையவர் தாம் 31. "कारुण्याद्गुरुपूत्तमो यतिपतिः (காருண்யாத்3கு3ருஷோத்தமோ யதிபதி:) என்கிறபடியே எல்லாரிலும் உத்க்ருஷ்டராய், எழுபத்துநாலு ஸிம்ஹாஸனஸ்த2ரும் ஆசைப்பட்டு மேல்விழுந்து ஆஶ்ரயிக்கும்படி ஸ்ப்ருஹணீயருமாய், மோக்ஷப2லப்ரத3ருமாய், இன்னாரின்னவர்களென்று அவர்களையும் விடாமல், ருசியுடையவர் பக்கலெல்லாம் ரஹஸ்யார்த்த2ங்களை வெளியிட்டருளி, அளவிறந்த ஸ்ரீவைஷ்ணவர்களோடு வாசியற வாய்த்த எல்லாரையுப் ஈடுபடுத்தி, க்ருமிகண்டனடியாக வந்த துர்த்தசையிலே முதலியாண்டான் தொடக்கமானாராலே பேணப்பட்டுத் தம்முடைய விஶ்லேஷத்தில் ஸ்ரீபாத3த்திலுள்ளவர்கள் பலரும் மூச்சடங்கும்படியாயிறே எழுந்தருளியிருந்தது. ஆகையால் ஆழ்வார் திருவடிகள் உடையவர் தாமேயிறே.

உடையவர் ப்ரயாணத்தில் மூச்சடங்கினார்கள் பலருமுண்டிறே. கணியனூர்ச் சிறியாச்சான் உடையவரைப் பிரிந்து கணியனூரிலே எழுந்தருளிச் சிலநாள் கழிந்தவாறே ஸ்வாசார்யரான உடையவரை ஸேவிக்க வேணுமென்று தேட்டமாயெழுந்தருள, நடுவழியிலே ஒரு திருநாமதா4ரி கோயிலில் நின்றும் வரக்கண்டு, அவனை, "எங்களாசார்யரான எம்பெருமானார் ஸுக2மே எழுந்தருளியிருக்கிறாரோ?" என்று கேட்க, அவனும் உடையவருடைய ப்ரயாணத்தைச் சொல்ல, "எம்பெருமானார் திருவடிகளே ஶரணம்" என்று மூச்சடங்கினாரிறே. குமாண்டூர் இளையவில்லி என்கிறவர் திருப்பேரூரிலே எழுந்தருளியிருக்கச் செய்தே, ஒருநாள் ராத்ரி ஸ்வப்னத்திலே உடையவர் அநேகமாயிரம் ஆதி3த்யர்கள் சேர உதி3த்தாப்போலே

நிரவதிக தேஜோரூபமான திவ்ய விமானத்திலே ஏறியருளி நிற்கப் பரமபதத்துக்கும் பூமிக்கும் நடுவே நிரவகாசமாம்படி பரமபதநாதன், அநந்த கருட விஷ்வக்ஸேனாதிகள் தொடக்கமான அநேகமாயிரம் நித்யஸூரிகளும், ஆழ்வார் நாதமுனிகள் தொடக்கமான அளவிறந்த முக்தரும் தாமுமாக, ஶங்க காஹளபேரிகள் தொடக்கமான வாத்ய கோஷங்களுடனே வந்து உடையவரை எதிர்கொண்டு திவ்யவிமானம் முன்னே நடக்கத் தாமும் பரிகரமும் பின்தொடர்ந்து போகிறதாகக் கண்டு திடுக்கிட்டு எழுந்திருந்து, அசலகத்தில் வள்ளல் மணிவண்ணனை அழைத்தருளி, "எங்களாசார்யரான எம்பெருமானார் திவ்யவிமானத்திலே ஏறியருளி, பரமபதநாதன் நித்யஸூரிகளும் தானுமாக எதிர்கொள்ளப் பரமபதத்துக்கு எழுந்தருளுகிறதாகக் கண்டேன். தரியேனினி" என்றருளிச்செய்து 'எம்பெருமானார் திருவடிகளே ஶரணம்' என்று மூச்சடங்கினாரிறே. இப்படி இருந்த இடங்களிலே மூச்சடங்கினார் பலரும் உண்டிறே. அருகிருந்தாரை ஏற்கவே ஆணையிட்டு விலக்குகையாலும் தர்ஶநார்த்தங்களை ப்ரவர்த்திப்பிக்க வேண்டிப் பெருமாள் வலியவிட்டு வைக்கையாலும் அருகிருந்த முதலிகள் ஆற்றாமைப்பட்டிருந்தார்கள். இப்படித் தம்முடைய விஶ்லேஷத்தில் ஸ்வாஶ்ரிதர் மூச்சடங்கும்படியான வைலக்ஷண்யமுடையராயிற்று உடையவர்தாமிருப்பது.

உடையவர் திருக்குருகைப்பிரான் பிள்ளானுக்குத் திருவாய்மொழி ப்ரஸாதிக்கிறபோது "பொலிக பொலிக" வந்தவாறே திருக்குருகைப்பிரான் பிள்ளான் ஹர்ஷபுலகித காத்ரராய் விஸ்மயாவிஷ்டசித்தராய் எழுந்தருளியிருக்க, உடையவரும் அத்தைக்கண்டு 'இதென்ன வேறுபாடு தோற்றியிராநின்றீர்' என்று கேட்டருள, "ஆழ்வார் தேவரீருடைய திருவவதாரத்தைக் கடாக்ஷித்தருளி 'கலியும் கெடும் கண்டு கொண்மின்' என்று அருளிச்செய்தார். அப்படியே தேவரீரும் உருக்கள்தோறும் நாமே இதுக்கு விஷயமென்று தொட்டுக்காட்டியருளிற்று.

அத்தையெல்லாம் இப்போது நினைத்து ஹர்ஷபரவஶனாய், ஆழ்வார் அருளிச்செய்தபடியே ஸர்வோத்தாரகராய் நாடடங்க வாழும்படி திருவவதரித்த தேவரீரிடத்திலே ஸம்பந்தமும் பெற்று தேவரீர் திருப்பவளத்தாலே திருவாய்மொழிக்குப் பொருள் கேட்கும்படிக்கு ஒரு ஸுக்ருதம் நேர்படுவதே! என்று விஸ்மயப்பட்டிருந்தேன்" என்ன, உடையவர் மிகவும் உகந்தருளி, அன்று ராத்ரி காலத்திலே பிள்ளானை அழைத்தருளி, அவர் திருக்கையைப் பிடித்துக்கொண்டு பேரருளாளர் ஸன்னிதியிலே அழைத்துக்கொண்டு எழுந்தருளித் தம்முடைய திருவடிகளிரண்டையும் அவர் முடியிலே வைத்தருளி, "இத்தையே தஞ்சமாகப்பற்றி விஶ்வஸித்திரும்; உம்மை அடைந்தார்க்கும் இத்தையே காட்டிக் கொடும்" என்றருளிச்செய்து, "நாளை பேரருளாளர் ஸன்னிதியிலே தொடங்கி திருவாய்மொழிக்கு, ஸ்ரீவிஷ்ணு புராண ஸங்க்யையிலே ஆறாயிரம் க்ரந்தமாக வ்யாக்யானம் பண்ணும்" என்று நியமித்தருளினார். இத்தால் தம்முடைய உத்தாரகத்வத்தை வெளியிட்டபடியிறே.

உடையவர் தம் திருவடிகளிலே ஆஶ்ரயித்த கூரத்தாழ்வானையும் முதலியாண்டானையும் அருளாளப்பெருமாளெம்பெருமானாரையும் கூட்டிக்கொண்டு திருவாய்மொழிக்கு வ்யாக்யானம் பண்ணிக்கொண்டு இருக்கிற நாளிலே, ஆசார்யர்கள் எல்லாரும் உடையவர் திருவடிகளிலே மேல்விழுந்து ஆஶ்ரயிக்க, இந்த வ்ருத்தாந்தத்தைக் கேட்டு அனந்தாழ்வானும், எச்சானும், தொண்டனூர் நம்பியும், மருதூர் நம்பியும், உடையவர் திருவடிகளிலே ஆஶ்ரயிக்கவேணுமென்று எழுந்தருள, அவர்களை அருளாளப் பெருமாளெம்பெருமானார் திருவடிகளிலே ஆஶ்ரயிப்பித்தருளினார். அருளாளப்பெருமாளெம்பெருமானாரும் போர பயப்பட்டு, "குருவியின் கழுத்திலே பனங்காயைக் கட்டினாப்போலே செய்தாரித்தனை: இதுக்கெல்லாம் எனக்கு அதிகாரம் போராது; எம்பெருமானார் ஸர்வோத்தாரகராய்க்கொண்டு ஜகத்தடைய வாழப்பிறந்தவராகையாலே நமக்கெல்லாம் அவர் திருவடிகளேயாகை

யாலே, எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்று விச்வஸித்து நிர்ப்பரராய் இருங்கோள்'' என்று அருளிச் செய்தார். பின்பு உடையவர் அவர்களை அழைத்தருளி ''நாம் புருஷத்ஸம்பந்தம் பண்ணிற்றிலோமில்லை என்று குறைப்பட்டிராதே கிடீர்கோள்; அவர் பண்ணினதே நாம் பண்ணினது. உங்கள் பேற்றுக்கு நாமே கடவோம்'' என்று அருளிச்செய்து, திருவடிகளிரண்டையும் நெருக்கி வைத்தருளி, 'இத்தையே தஞ்சமாக நினைத்திருங்கோள்' என்று அருளிச்செய்தாரிறே.

உடையவர், முதலிகளும் தாமுமாகத் திருவேங்கடமுடையானை ஸேவிக்கவேணுமென்று பேரருளாளனை அநுமதிகொண்டு திருப்பதியிலே எழுந்தருளி, ''விண்ணோர் வெற்பு'' என்கிறபடியே நித்யஸூரிகள் வந்து பரிமாறுமிடத்தே நாம் கால்கொண்டு மிதிக்கையாவதென்னென்று அங்கே திருத்தாழ்வாரை அடியிலே எழுந்தருளியிருந்து, ''தானே தொழுமத்திசையுற்று நோக்கியே'' என்கிறபடியே திருவேங்கடமுடையானை * திசை கைகூப்பி ஸேவித்து மீண்டு எழுந்தருளுவதாக உத்யோகித்தவளவிலே, அனந்தாழ்வான் தொடக்கமான ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரும், தேவரீர் ஏறவிடில் நாங்களும் ஏறோம்; மற்றையொருவரும் ஏறுவதில்லையாகையாலே தேவரீர் அவஶ்யம் எழுந்தருளவேணுமென்ன, உடையவரும் திருமேனி ஶோதனையும் பண்ணிக்கொண்டு, 32. ''पादेनाऽध्यारोहति'' (பாதே₃நாத்₄யாரோஹதி) என்று ஸ்ரீவைகுண்ட₂நாத₂னுடைய நியோக₃த்தாலே பாத₃பீட₂த்திலே அடியிட்டு ஏறுமாப்போலே திருவேங்கடமுடையான் அருளப்பாடிட்டருளத் திருமலையிலே ஏறியருளித் திருப்பரியட்டப்பாறையளவாக எழுந்தருளாநிற்க, ''முடியுடைவானவர் முறைமுறை எதிர் கொள்ள'' என்கிறபடியே பெரியதிருமலைநம்பி திருவேங்கடமுடையானுடைய தீர்த்த₂ப்ரஸாத₃மும் கொண்டு ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயோடே எதிர்கொள்ள, உடையவரும் த₃ண்ட₃ம் ஸமர்ப்பித்து, தீர்த்த₂ப்ரஸாத₃மும் ஸ்வீகரித்து,

''தேவரீர் எழுந்தருளவேணுமோ? ஒரு சிறியாரில்லையோ'' என்ன, ''நாலு திருவீதியும் ஆராய்ந்து பார்த்தவிடத்திலும் என்னிலும் சிறியாரைக் கண்டிலேன். தேவரீரை எதிர்கொள்ளுகைக்குத் திருவேங்கடமுடையான் தானே எதிர்கொள்ளவேணும்; ஸகலஜன ஜீவாதுவாய், ஸர்வரையும் உத்தரிப்பிக்கவேணுமென்று திருவவதரித்தருளின தேவரீருடைய வைப₄வத்தைப் பார்க்குமளவில் அடியேன் எதிரே விடைகொள்ளுகிறது தகாது; ஆகிலும், திருவேங்கடமுடையானுடைய நியோக₃த்தாலே விடைகொண்டேனித்தனை'' என்று அருளிச்செய்ய, உடையவரும் போர உகந்து, அவருடனேகூடத் திருவேங்கடமுடையானுடைய ஸந்நிதி₄யிலே எழுந்தருளி, த₃ண்ட₃ம் ஸமர்ப்பித்து நிற்க, அர்ச்சகமுகே₂ந அருளப்பாடிட்டருளி ''நாமுமக்கு முன்பே நம் தெற்கு வீட்டிலேதானே உப₄யவிபூ₄த்யைஶ்வர்யங்களையும் தந்து ஜக₃த்தையடையத் திருத்தி வாழ்வித்திரும் என்று நியமித்தோமே, என்ன குறையாக வந்தீர்?'' என்ன—'நாயன்தே! ''கிடந்ததோர் கிடக்கை'' என்றும், ''பிரானிருந்தமை'' என்றும், ''நிலையார நின்றான்'' என்றும் சொல்லுகிறபடியே தேவரீர் நிற்றல், இருத்தல், கிடத்தல் செய்தால் அது மிகவும் ஆகர்ஷகமாயிருக்கும். அதில் கிடையழகு கோயிலிலே காட்டியருளிற்று; நிலையழகு ஹஸ்திகி₃ரியிலே காட்டியருளிற்று, ''அமரர் முனிக் கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே'' என்கிறபடியே திருமலையிலே கு₃ணநிஷ்ட₂ருக்கும் கைங்கர்ய நிஷ்ட₂ருக்கும் காட்டிக்கொடுத்துக்கொண்டு இருக்கிற நிலையழகும் கண்டு அநுப₄விக்க வேணுமென்று விடைகொண்டேன்' என்ன, ஆகில், இங்கு வாருமென்று திருவடிகளிலே திருமுடியை மடுக்கச் சொல்லி ''இத்தை மறவாதே நெஞ்சிலேகொண்டு த₃ர்ஶனத்தை நடத்திவையும்; உப₄யவிபூ₄திக்கும் நீரே கடவீர். உம்முடைய அபி₄மானத்திலே ஒதுங்கினவர்களே நமக்கு வேண்டியவர்கள்; எல்லாரையும் நமக்காளாம்படி திருத்தும்; ஜக₃த்தை அடையத் திருத்தவேணுமென்றாய்த்து, நாமும்மை நம் முதன்மையில் நின்றும் அழைப்பித்தது; உம்மோடு ஸம்ப₃ந்த₄முடையார்க்கு ஒரு குறைகளுமில்லை.

'சூழல் பல பல' என்கிறபடியே நாம் அநேகாவதாரங்கள் செய்தவிடத்தில் ஒருவரும் அகப்படாமல் இழவோடே போனோம். அந்த இழவை நீர் தீர்ப்பீரென்று ஆறியிருக்கிறோம். அப்படியே செய்யப்பாரும்'' என்றருளிச்செய்தார். இத்தால் திருவேங்கடமுடையானும் இவருடைய உத்தாரகத்வத்தை வெளியிட்டானாய்த்து.

அனந்தரம், உடையவரும் முதலிகளுமாக நம்பியை ஸேவிக்கவேணுமென்று திருக்குறுங்குடிக்கு எழுந்தருளி, நம்பி ஸன்னிதியிலே த₃ண்ட₃ம் ஸமர்ப்பித்து நிற்க, நம்பியும் உடையவரை அருளப்பாடிட்டருளி,— 33. ''बहूनि मे व्यतीतानि जन्मानि'' (ப₃ஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி) என்கிறபடியே எத்தனை ஜன்மம் பிறந்தோமோ தெரியாது. அதிலொருவரும் அகப்படுவாரின்றிக்கே, 34. ''आसुरीं योनिमापन्नाः मूढा जन्मनि जन्मनि । मामप्राप्यैव कौन्तेय ततो यान्त्यधमां गतिम् ॥'' (ஆஸுரீம் யோநிமாபந்நா: மூட₄ா ஜந்மநி ஜந்மநி। மாமப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்யத₄மாம் க₃திம் ॥) என்கிறபடியே ஆஸுரப்ரக்ருதிகளாய், அதோ₄க₃திகளிலே விழுந்துவிட்டார்கள். இப்போதே எல்லாரும் உமக்கேயாளாய்த் திரிகின்றார்கள். இப்படி இவர்கள் எல்லாரையும் அகப்படுத்திக்கொண்ட விரகெங்ஙனே? அவ்விரகை நமக்கு ஒன்று நீர் சொல்லவேணுமென்று திருவுள்ளமாயருள, உடையவரும் ''தேவரீர் கேட்டருளும் அடைவிலே கேட்டருளினால் விண்ணப்பம் செய்கிறேன்; தேவரீர் இறுமாப்புக்குச் சொல்லுவதில்லை'' என்ன, நம்பியும் தி₃வ்யாஸ்த₂ானத்தில் நின்றும் கீழேயிறங்கியருளி, தரையிலே ஒரு ஒலியலை விரித்து அதின் மேலே எழுந்தருளியிருந்து உடையவரைத் தன் ஸிம்ஹாஸனத்திலே எழுந்தருளியிருக்கும்படி பண்ணி, எல்லாரையும் புறப்படுத்தி அஷ்டகர்ணமாயிருந்து, இனித்தான் சொல்லிக்காணீரென்ன, உடையவரும் 18. ''निवेश्य दक्षिणे स्वस्य विनताञ्जलिसंयुतम् । मूर्ध्नि हस्तं विनिक्षिप्य दक्षिणं ज्ञानदक्षिणम् । सव्यं तु हृदि विन्यस्य कृपया वीक्षयेद्गुरुः । स्वाचार्यं हृदये ध्यात्वा जप्त्वा गुरुपरम्पराम् । एवं प्रपद्य देवेशमाचार्यः कृपया स्वयम् । अध्यापयेन्मन्त्ररत्नं सर्षिच्छन्दोऽधिदैवतम् ॥'' (நிவேஶ்ய

தக்ஷிணே ஸ்வஸ்ய விநதாஞ்ஜலி ஸம்யுதம் | மூர்த்நி ஹஸ்தம் விநிக்ஷிப்ய தக்ஷிணம் ஜ்ஞாநதக்ஷிணம் | ஸவ்யம து ஹ்ருதி விந்யஸ்ய க்ருபயா வீக்ஷயேத் குரு: | ஸ்வாசார்யம் ஹ்ருதயே த்யாத்வா ஜப்த்வா குருபரம்பராம் | ஏவம் ப்ரபத்ய தேவேசம் ஆசார்ய: க்ருபயா ஸ்வயம் | அத்யாபயேந்மந்த்ர ரத்நம் ஸர்வஸிச்சந்தோதிதைவதம் ||) என்கிறபடியே ஸகலோபநிஷத்ஸாரஸ்ரேஷ்டமாய், மந்த்ரரத்நம் என்று திருநாமத்தையுடைய த்வயத்தை நம்பியுடைய வலத்திருச் செவியிலே அருளிச்செய்ய, நம்பியும் அருளிச்செய்தபடி.— ''நாம் முன்பொரு காலத்திலே பதரிகாஸ்ரமத்திலே ஸிஷ்யாசார்யரூபேண நின்று திருமந்த்ரத்தை வெளி யிட்டோம். அவ்விடத்திலே ஸிஷ்யத்வேந நின்றவளவில் ஆசார்யவஸ்து வ்யக்த்யந்தரமாகப் போராமல் நாமேயாய் நின்றோமித்தனை. மத்வ்யதிரிக்தரிலே ஒருவன் ஆசார்யனாய் நிற்க, நாம் ஸிஷ்யனாய் நின்று அவன் பக்கலிலே ரஹஸ் யார்த்தம் கேட்கவும் ஒரு திறமும் பெற்றதில்லை என்று பெருங்குறையோடே இருந்தோம்; அக்குறை உம்மாலே தீரப்பெற்றதே! இனி நாம் இன்று தொடங்கி இராமாநுச முடையாரிலே அந்தர்ப்பவிக்கப் பெற்றோம்'' என்று அருளிச்செய்து 'நாம் வைஷ்ணவ நம்பியானதும் இன் றுய்த்து' என்று அருளிச்செய்தார். இத்தால், நம்பியுடைய ஸிஷ்யத்வம் ஸ்வாதந்த்ர்யத்தினுடைய எல்லை நிலமென்று தாத்பர்யம், ஸர்வர்க்கும் ப்ரதம குருவான நம்பி உடைய வருடைய ஸிஷ்யத்வப்ரபாவத்தைமிட்டு ஸிஷ்யத்வத்தை ஆசைப்பட்டுப் பெற்றது—உத்தாரகத்வேந உக்தமான இவருடைய ஆசார்யத்வத்தை வெளியிட்டபடியிறே.

நடாதூரம்மாள் ஸ்ரீபாதத்திலே பத்துப் பன்னிரண்டு ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஸ்ரீபாஷ்யம் வாசிக்கிற காலத்திலே, பக்திப்ரபத்திகளிரண்டும் துஸ்ஸகத்வ ஸ்வரூபவிருத்தத்வ விஸ்வாஸதுர்லபத்வாதிகளாலே பண்ணக் கூடாமல் வெறுங்கையனான சேதனனுக்குப் பேறுண்டாம்படி எங்ஙனே? என்று சிலர் கேட்க, ''இவையிரண்டும் இல்லா தார்க்கு எம்பெருமானாருடைய அபிமானமே உத்தாரகம்;

இத்தை ஒழியப் பேற்றுக்கு வழியில்லை. நான் அறுதியிட்டிருப்பதும் அப்படியே" என்று அருளிச்செய்தார். பின்பு தம்முடைய சரமதசையிலே ஸ்ரீபாதத்து முதலிகள், எங்களுக்குத் தஞ்சமேதென்று சதுரராய்க்கேட்க, "உங்களுக்கு பக்திப்ரபத்திகள் துஷ்கரங்களாய் ஒழிந்தது; ஸுலபமென்று எம்பெருமானாரைப் பற்றி அவரே தஞ்சமென்று விஶ்வஸித்திருங்கோள். பேற்றுக்குக் குறையில்லை" என்று அருளிச்செய்தார். 35. "प्रयाणकाले चतुरस्स्वशिष्यान् पदान्तिकस्थान्वरदो हि वीक्ष्य । भक्तिप्रपत्ती यदि दुष्करे वः रामानुजार्यं नमतेत्यवादीत् ॥" (ப்ரயாணகாலே சதுரஸ்ஸ்வஶிஷ்யாந் பதாந்திகஸ்தாந் வரதோ ஹி வீக்ஷ்ய । பக்திப்ரபத்தி யதி துஷ்கரே வ: ராமாநுஜார்யம நமதேத்யவாதீத் ॥) என்று இவ்வர்த்தம் ப்ரஸித்தமிறே.

காராஞ்சியில் ஸோமயாஜியார், எம்பெருமானார் திருவடிகளிலே ஆஶ்ரயித்துச் சில நாள் ஆசார்ய கைங்கர்யம் பண்ணிக்கொண்டிருந்து, பின்பு தம்முடைய ஊரான காராஞ்சியிலே எழுந்தருளிச் சில நாள் கழித்தவாறே, ஸ்வாசார்யரைத் தேட்டமாய், தேவியாருடைய உபாதியினாலே ஸ்வாசார்யருடைய ஸந்நிதிக்கெழுந்தருளக் கூடாமையாலே, எம்பெருமானார்க்கு ப்ரதிநிதியாக ஒரு விக்ரஹம் ஏறியருளப்பண்ண, அந்த ஸம்ஸ்தானம் நன்றாக வகுப்புண்ணாமையாலே அத்தையழித்து வேறே ஏறியருளப்பண்ண, அற்றைக்கு ராத்ரி இவர் ஸ்வப்னத்திலே உடையவர் எழுந்தருளி, "நீர் ஏன் இப்படி நம்மை நலிந்து உருவழிக்கிறீர். எங்ஙனேயிருந்தாலும் நம்முடைய அபிமானமே உத்தாரகமென்று அத்யவஸிக்கமாட்டாத நீரோ நம் விக்ரஹத்திலே ப்ரதிபத்தி பண்ணப்போகிறீர்" என்று அருளிச்செய்ய, திடுக்கிட்டு எழுந்திருந்து அப்போதுதானே அந்த விக்ரஹத்தையும் சேமத்திலே எழுந்தருளப்பண்ணி, தேவியாரையும் அறத்துறந்து, அங்கு நின்றும் புறப்பட்டுக் கோயிலேற எழுந்தருளிக் கண்ணும் கண்ணீருமாய்க் கைகால் பதறி வந்து உடையவர் திருவடிகளிலே வேரற்ற மரம்போலப் புகல் அற்று விழுந்து

பெருமிடறுசெய்து அழைப்புக்கவாறே, இது ஏதென்று கேட்டருள, அங்குற்றை வ்ருத்தாந்தத்தை ஸப்ரகாரமாக விண்ணப்பம் செய்ய, உடையவரும் முறுவல் செய்தருளி, "வாரீர் அஜ்ஞாதாவே! உம்முடைய ஸ்த்ரீபாரவஶ்யத்தை அறுக்கவேண்டிச் செய்தோமித்தனை. நீர் இகழ்ந்தாலும் நாம் உம்மை நெகிழவிடத்தக்கதில்லை. நீர் எங்கேயிருந்தாலும் நம்முடைய அபி₄மானத்தாலே உம்முடைய பேற்றுக்குக் குறைவாராது. ஸர்வப₄ரங்களையும் நம் பக்கலிலே பொகட்டு நிர்ப₄ரராய் மார்விலே கைபொகட்டு உறங்கும்" என்று அருளிச்செய்தார் — என்று நம்முடைய பிள்ளை அருளிச்செய்வர்.

கணியனூர் சிறியாச்சான் ஸசேலஸ்நான பூர்வகமாக ஆர்த்தியோடே உபஸன்னராய்ப் பெரிய திருமண்டபத்திலே முதலிகளெல்லாரையும் திருவோலக்கமாக இருத்தி ஸ்ரீஶட₂கோபனையும் திருமுடியிலே வைத்துக்கொண்டு தி₃வ்யாஜ்ஞையிட்டு, 36 "सत्यं सत्यं पुनस्सत्यं यतिराजो जगद्गुरुः। स एव सर्वलोकानां उद्धर्ता नात्र संशयः॥" (ஸத்யம் ஸத்யம் புநஸ் ஸத்யம் யதிராஜோ ஜக₃த்₃கு₃ரு:। ஸ ஏவ ஸர்வலோகாநாம் உத்₃த₄ர்த்தா நாத்ர ஸம்ஶய: ॥) என்று அருளிச்செய்து "எல்லார்க்கும் எம்பெருமானார் திருவடிகளொழிய வேறொரு தஞ்சமில்லை; த்ரிப்ரகாரமும் ஸத்யமே சொல்லுகிறேன்; ப்ரபன்ன குலாந்தர்ப₄தர்க்கெல்லாம் எம்பெருமானாரே உத்தாரகர்; இதில் சற்றும் ஸம்ஶயமில்லை" என்று திருவோலக்கத்தின் நடுவே கோ₄ஷித்தாரிறே.

அருளாளப்பெருமாளெம்பெருமானார் திருவடிகளிலே ஆஶ்ரயித்த அனந்தாழ்வானும், எச்சானும், தொண்டனூர் நம்பியும், மருதூர் நம்பியும் உடையவர் திருவடிகளிலே த₃ண்ட₃ம் ஸமர்ப்பித்து, "இவ்வாத்மாவுக்கு ஆசார்யன் ஒருவனோ பலரோ, இத்தனை பேருண்டென்று நிஶ்சயித்து அருளிச்செய்யவேணும்" என்று கேட்க, 'பொன்னாச்சியாரைக் கேளுங்கோள்' என்று அருளிச்செய்ய, அவர்களும் அங்கே எழுந்தருளி, "எம்பெருமானார் தேவரீரைக் கேட்கச்சொல்லி அருளிச்செய்தார். இவ்

வாத்மாவுக்கு ஆசார்யன் 'ஒருவனோ பலரோ? இத்தனை பேரும்பெடென்று தேவரீர் நிஶ்சயித்தருளிச்செய்யவேணும்'' என்ன, அவரும் திருக்குழற்கற்றையை உதறி ஒன்றாக ஒட்டமுடிந்து பொகட்டுக்கொண்டு, ''அடியேனாலே இது நிஶ்சயித்துச் சொல்லக்கூடாது. அபலையான அடியேனுக்குத் தெரியுமோ? எம்பெருமானார் தாமே அருளிச்செய்ய வேணுமித்தனை'' என்று அருளிச்செய்து, தரையிலே கிடந்த காவிநூலை எடுத்துத் தலையிலே வைத்துக்கொண்டு உள்ளே எழுந்தருளினார். இவர்களும் அப்ராப்தமநோரதராய், உடையவர் ஸன்னிதியிலே சென்று தண்டம் ஸமர்ப்பித்து நிற்க, போன கார்யம் என்னென்று கேட்டருள, அவர்-தமக்குத் தெரியாது. எம்பெருமானார் தாமே அருளிச் செய்யவேணுமத்தனை — என்று அருளிச்செய்தார் என்ன, நீங்கள் போனபோது அவர் செய்த வ்யாபாரம் என்னென்று கேட்க, திருக்குழற்கற்றையை உதறி ஒன்றாக முடித்துத் தரையிலே கிடந்த காவிநூலை எடுத்துத்தலையிலே வைத்துக் கொண்டு எங்களை அனுப்பி உள்ளே எழுந்தருளினார் என்ன, ''அவர் வெறுமனே எழுந்தருளவில்லை. நீங்கள் பண்ணின ப்ரஶ்னத்துக்கு ஸதுத்தரமாகப் பொருள் சொல்லிப் போனார். உங்களுக்குத் தெரிந்ததில்லையே'' என்றருளிச்செய்ய, 'ஆகிலும் அந்த அர்த்தத்தை தேவரீர் வெளியிட்டருளவேணும்' என்ன, உடையவர் அருளிச் செய்தபடி — ''அவர் திருக்குழற்கற்றையை உதறினத்தினாலே — இவ்வாத்மாவுக்கு ஆசார்யனைப் பார்க்கும்போது ஓரோராகாரத்தாலே பலராயிருக்குமென்றபடி; ஒன்றாக முடிந்து பொகட்டத்தாலே — இவனுக்கு ஆசார்யனாய் நின்று பேற்றைப் பண்ணிக்கொடுக்கிறவன் ஒருவனென்றபடி; தரையிலே கிடந்த காவிநூலை எடுத்ததினாலே பேற்றுக்குடலாக அறுதியிட்ட ஆசார்யனை விஶேஷிப்பதாக நினைத்துப் பேற்றுக்குடலாக அறுதியிட்ட ஆசார்யர் சதுர்த்தாஶ்ரமத்தை ப்ராபித்துக் காஷாயம் சார்த்தியிருக்கிற எம்பெருமானாரென்று நம்மைச் சொன்னபடி. தலையிலே வைத்ததினாலே நமக்கு மூர்த்தந்யரான இவர் அனைவர்க்கும் அதிஶயாவஹர் என்னுமிடத்தை வெளியிட்டபடி;

அங்கிராமல் உள்ளே புகுந்ததினலே இப்படிப்பட்ட ஆசார்யனை ஹ்ருதயத்துக்குள்ளே, "பேணிக் கொணர்ந்து புகுதவைத்துக்கொண்டேன் பிறிதின்றி" என்கிறபடியே பேணியிட்டு வைத்துக்கொண்டு அநுஸந்தித்துக்கொண்டு இருக்கையே தத்ஸம்பந்திகளுக்கு ஸ்வரூபமென்னும் அர்த்தத்தை வெளியிட்டபடி. ஆகையாலே நீங்களும் இவ்வர்த்தத்திலே நிஷ்டராய்ப் போருங்கோளென்று அருளிச்செய்தார். இத்தாலே பொன்னுச்சியாரை யிடுவித்துத் தம்முடைய உபாயதாத்மகமான ஆசார்யத் வத்தை வெளியிட்டபடியிறே.

எம்பாரும் வடுகநம்பியும் உடையவர் ஏகாந்தத்திலே எழுந்தருளியிருக்கிறவளவிலே அவர் திருவடிகளிலே சென்று தண்டம் ஸமர்ப்பித்து, மதுரகவியாழ்வார் "தேவுமற்றறியேன்" என்று ஶேஷித்வ ஶரண்யத்வ ப்ராப்யத்வங்கள் மூன்றையும் ஆழ்வாரிடத்திலே அறுதியிட்டுத் ததேக நிஷ்டராய், ப்ரதமபர்வத்திலே கண்வையாதே எழுந்தருளியிருந்த நிலை அடியோங்களுக்கு உண்டாம்படி க்ருபை பண்ணியருளவேணுமென்ன, மதுரகவியாழ்வார் ஆழ்வாரிடத்திலே பண்ணின ப்ரதிபத்தி உங்களுக்கு நம் பக்கலிலே உண்டாம்படி பண்ணினேனே; இனி உங்களுக்குச் செய்ய வேண்டும் அம்ஶம் ஏதென்ன, இந்த ப்ரதிபத்தி யாவதாத்மபாவியாய் நடக்கும்படி பண்ணியருளவேணுமென்ன, 'ஆசார்யாபிமான நிஷ்டனாகில் இங்ஙனிருக்க வேண்டாவோ?' என்று மிகவும் உகந்தருளி, 37. "उपायोपेयभा-वेन तमेव शरणं व्रजेत्" (உபாயோபேயபாவேந தமேவ ஶரணம் வ்ரஜேத்) என்கிறபடியே நமக்கிரண்டாகாரமுண்டாகை யாலே, இரண்டிடத்திலும் நம் பக்கலிலே இரண்டையும் அறுதியிட்டு, "தேவுமற்றறியேன்" என்றிருக்கக் குறையில்லை. இதுதான் உங்களளவுமாத்ரமன்று; நம்முடைய ஸம்பந்திஸம்பந்திகளுக்கும் இந்த ப்ரதிபத்தியே யாயிற்று கார்யகரமாவதென்று அருளிச்செய்தார்.

"ஆசார்யனுக்கு இங்கிருக்கும் நாள் உபாயத்வமித்தனைபோக்கி ப்ராப்யபூமியில் உபாயத்வம் கொள்ளும்படி

எங்ஙனே? ப்ராப்யம் கைபுகுந்தால் ப்ராபகம் வேண்டுவதில்லையே" என்னில், அங்குத்தானும் ஆசார்யனுக்கு உபாயத்வமுண்டு, ஆகையிறே, 38. "अत्र परत्र चापि नित्यं यदीयचरणौ शरणं मदीयम्" (அத்ர பரத்ர சாபி நித்யம் யதீ₃ய சரணௌ ஶரணம் மதீ₃யம்) என்று ஆளவந்தார் அருளிச்செய்தது. 39 "साध्याभावे महाबाहो साधनैः किं प्रयोजनम्" (ஸாத்₄யாபா₄வே மஹாபா₃ஹோ ஸாத₄நை: கிம் ப்ரயோஜநம்) என்கிறபடியே ப்ராப்யபூ₄மியிலே எல்லார் கைப்பட்டு, ஸித்₃த₄மாய் ஸாத்₄யமன்றியிலேயிருக்கையாலே, ஸாத₄நங்கொண்டு கார்யமில்லையேயாகிலும், 40. "उपायोपेयत्वे तदिह तव तत्त्वं न तु गुणौ" (உபாயோபேயத்வே ததி₃ஹ தவ தத்வம் ந து கு₃ணௌ) என்கிறபடியே இரண்டும் ஸ்வரூபமாயிருக்கும்; அதிலொன்றுக்கு ஸங்கோசமில்லாமையாலே ஒளிவிஞ்சிச் செல்லாநிற்கும். மற்றையது உள்ளடங்கியிருக்கும். இவ்வாகாரம் ப₄க₃வத்₃விஷயத்திலன்றேயென்னில்; ஆசார்ய விஷயத்திலும் அப்படியே கொள்ளக்குறையில்லை. 37. "उपायोपेयभावेन तमेव शरणं व्रजेत्" (உபாயோபேயபா₄வேந தமேவ ஶரணம் வ்ரஜேத்) என்கையாலே ப்ராப்யத்வ ப்ராபகத்வங்களிரண்டும் ஆசார்யனுக்கு வடிவாயிருக்குமிறே. இவை வடிவாகையாலேயிறே 38. "अत्र परत्र चापि" (அத்ர பரத்ர சாபி) என்றது. 37. "தமேவ" என்று அவதா₄ரணத்தை யிட்டு அந்யயோக₃வ்யவச்சே₂த₃ம் பண்ணுகையாலே சரமபர்வமும் ஸஹாயாந்தர ஸம்ஸர்க்கா₃ஸஹமாயிருக்கும். அதாவது கார்யகாலத்தில் சரமபர்வம் ஸ்வவ்யதிரிக்தத்தை ஸஹாயமாக அபேக்ஷியாமல் அந்திமோபாயமாயிருக்குமென்றபடி. ப₄க₃வத்ஸம்ப₃ந்த₄ம் அஞ்சியிருக்க அடுக்கும்: இது நிஸ்ஸம்ஶயமிறே. அது ஸம்ஸாரப₃ந்த₄ஸ்தி₂தி மோக்ஷஹேதுவாயிருக்கும். இது மோக்ஷைகஹேதுவாயிருக்கும்; ப₄க₃வத்ஸம்ப₃ந்த₄ம் ஆசார்ய ஸம்ப₃ந்த₄த்தை அபேக்ஷித்திருக்கும், ஆசார்ய ஸம்ப₃ந்த₄த்துக்கு ப₄க₃வத்ஸம்ப₃ந்த₄ம் வேண்டுவதில்லை. ஈஶ்வர விஷயஜ்ஞானத்தை அபேக்ஷியாதென்றபடி. ஆசார்ய விஷயஜ்ஞான முண்டாகிலிறே ஈஶ்வரன் ஸ்வரூபவிகாஸத்தைப் பண்ணுவது. இங்கு அது

வேண்டுவதில்லை. இப்படி நிரபாயோபாயபூததரான உடைய வரிடத்திலே, ''தேவுமற்றறியேன்'' என்கிற ப்ரதிபத்தி தத் ஸம்பந்திகளுக்கெல்லாம் யாவதாத்மபாவியாக நடக்கக் குறையில்லை.

பூர்வாபரர்க்கெல்லாம் உடையவரே உத்தாரகராகில், ஆளவந்தார் நாதமுனிகளிடத்திலே உபாயத்வத்தை அறுதியிட்டபடி எங்ஙனேயென்னில், நாதமுனிகள் தான் ஆழ்வார் பக்கலிலே பெற்ற ரஹஸ்யார்த்தங்களையும், ஸ்வப்நார்த்தங்களையும், பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தையும் உய்யக்கொண்டார் பக்கலிலே சேர்த்து, பவிஷ்யத்தான ஆளவந்தாருடைய திருவவதாரத்தைக் கடாக்ஷித்து ''ஈச்வரமுனிகளுக்கு ஒரு குமாரருண்டாகப் போகிறார்; அவருக்கு இந்த ரஹஸ்யார்த்தங்களெல்லாத்தையும் வெளியிடும்'' என்று உய்யக்கொண்டாருக்கு அருளிச்செய்ய, அப்படியே தாமெழுந்தருளியிருக்கையிலே ஆளவந்தார் திருவவதரிக்கப் பெருமையாலே ஸ்ரீபாதத்தில் மணக்கால் நம்பியை நியமிக்க, அவரும் அப்படியே ஆளவந்தாருக்கு ஸம்ப்ரதாயார்த்தங்களையெல்லாம் வெளியிட, ஆளவந்தாரும் ''நாம் பிறவாதிருக்க முன்னமே தானே கருவிலே திருவுடையேனாம்படி விசேஷகடாக்ஷம் பண்ணியருளி, ஸம்ப்ரதாயார்த்தங்களையும் வெளியிடுவித்து, பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தையும் காட்டி, அதுதன்னை ஸமகாலத்திலே கண்ணுக்கிலக்காம்படி பண்ணியிருக்க, பின்னும் ஸத்வாரகஸ்வப்னமுகேந எழுந்தருளி விஷயீகரித்து, இப்படி பண்ணின உபகாரங்களுக்கு நம்மால் செய்யலாவதேதென்று நாதமுனிகளுடைய செயலுக்குத் தோற்று அவர் பக்கலிலே தமக்குண்டான உபகாரஸ்ம்ருதி யாவதாத்மபாவியாய் நடக்குமென்னுமிடத்தை வெளியிட வேண்டி 'நாதமுனிகள் அறுதியிட்ட விஷயத்தினளவும் போகவேணுமோ? தாமறுதியிட்ட விஷயத்தைக் காட்டிக் கொடுத்த இவரே நமக்கு எல்லாம்' என்கைக்காகச் சொன்னரித்தனை. நாதமுனிகள் நினைவேயாயிற்று இவர்க்கு உள்ளோடுகிற நினைவு. நாதமுனிகளிடத்திலே பேற்றுக்குடலாக உபாயத்வத்தை அறுதியிட்டாராகில்,

ஆழ்வாரிடத்திலே 41 'ஸர்வம்' என்று உபாயத்வம் சொல்லக் கூடாதிறே. ஆகையாலே 41. "मदन्वयानां सर्वं तदङ्घ्रियुगल प्रणमामि मूर्ध्ना" (மத3ந்வயாநாம் ஸர்வம் தத3ங்க்4ரியுக3ளம் ப்ரணமாமி மூர்த்4நா) என்று எல்லார்க்கும் தமக்கும் ஆழ்வார் திருவடிகளே உபாயமாக அறுதியிடுகையாலே, உடையவரே உத்தாரகரென்று அறுதியிட்டபடியிறே. அங்கே 38. 'मदीयं शरणम्' (மதீ3யம் ஶரணம்) என்று தம்மை ஒருவரையும் சொல்லி உபாயத்வத்தைச் சொல்லுகையாலே, அவர் தமக்குப் பண்ணின உபகாரத்துக்குத் தோற்றுத் தத்ஸம்ருத்3தி, ஸூசகமாகச் சொன்னாரென்னுமிடம் ஸித்3த4ம்.

எம்பார் ஒருராத்ரி திருவீதியிலே கு3ணாநுப4வத்துடனே உலாவியருளாநிற்க, பட்டர் பார்த்தருள, எம்பாரை ஸேவித்து—ஆசார்யத்வமும் த்3விவித4மாய், தத்3விஷய ஸ்வீகாரமும் த்3விவித4மாயன்றோ இருப்பது; எதிலே தேவரீர் அறுதியிட்டிருப்பதென்ன, எம்பாரும்—"க்ருபா மாத்ரப்ரஸன்னாசார்யனே முக்2யன்; பரக3தஸ்வீகாரமே பேற்றுக்கு உடல். இவை இரண்டையும் நான் எம்பெருமானாரிடத்திலே அறுதியிட்டிருப்பன். நீரும் 'பெருமாள் நம்மை புத்ரஸ்வீகாரம் பண்ணியருளினார்; ஆழ்வானுடைய பிள்ளை; ஸகல வித்3யைகளை அப்4யஸித்தோம்; நமக்கென்ன குறை' என்று இறுமாந்திராதே என்னைப்போலே எம்பெருமானாரிடத்திலே உத்தாரகத்வ ப்ரதிபத்திபண்ணி அவரே உத்தாரகரென்று நினைத்திரும்" என்று அருளிச்செய்தார்.

பட்டரும் நஞ்சீயருக்குத் திருவாய்மொழி வ்யாக்2யானம் அருளிச்செய்து சாத்தினவுடனே, 42. "प्रत्यक्षे गुरवस्स्तुत्याः" (ப்ரத்யக்ஷே கு3ரவ: ஸ்துத்யா:) என்கிறபடியே நஞ்சீயர் பட்டரை மிகவும் கொண்டாடி, அடியேனுடைய தலையிலே தேவரீர் திருவடிகளை ப்ரஸாதி3த்தருளவேணுமென்ன, ஏகாந்தத்திலே அழைத்தருளி, திருவடிகளிரண்டையும் ப்ரஸாதி3த்தருளி "இதுவன்று உமக்குத் தஞ்சம். உம்முடைய ப்ரதிபத்திக்காகச் செய்தோமித்தனை. உமக்கு

மெய்யே பேறு கைப்படவேண்டிலுல், உமக்கும் நமக்கும் மற்றுமுள்ள எல்லார்க்கும் உத்தாரகரான எம்பெருமானார் திருவடிகளே பேற்றுக்கு உடலென்று விஸ்வஸித்துத் ததேகநிஷ்டராய் இரும். இல்லையாகில் நித்யஸம்ஸாரியாய் விடுவீர்'' என்றருளிச்செய்தார். இத்தால் ''எம்பெருமானாருடைய ஸம்பந்தமே உஜ்ஜீவனத்துக்கு உடல். தத்வ்யதிரிக்த விஷயங்களை உஜ்ஜீவனத்துக்கு உடலாக நினைக்கை அஜ்ஞான கார்யம்'' என்றபடி. இவ்வர்த்தத்தை அமுதனாருளிச் செய்தருளினார்.—''இராமாநுசன் நிற்க வேறு நம்மை உய்யக்கொள்ளவல்ல தெய்வம் இங்கியாதென்றுலர்ந்து அவமே ஐயப்படாநிற்பர் வையத்துள்ளோர் நல்லறிவிழந்தே'' என்று. ''இராமாநுசன்—வேறு நம்மை உய்யக்கொள்ளவல்ல தெய்வம்'' என்கையால் எம்பெருமானாரை விட்டால் பின்னை உய்யக்கொள்ளவல்ல தெய்வமாகக் கண்டது எம்பெருமானேயிறே. இனி, சரமபர்வமான எம்பெருமானாரெழுந்தருளியிருக்க, ப்ரதமபர்வமான எம்பெருமானைப்பற்றுகை அஜ்ஞான கார்யமென்றபடி.

ஆஸன்னமான சரமபர்வத்தைக் கைவிட்டு விப்ரக்ருஷ்டமான ப்ரதமபர்வத்தைப் பற்றுகை அஜ்ஞான கார்யமென்னுமிடத்தை த்ருஷ்டாந்த ஸஹிதமாக அருளிச் செய்தாரிறே அருளாளப்பெருமாளெம்பெருமானார் ''எட்டவிருந்தகுருவை'' என்று.

''சரம பர்வத்துக்கு ஆளாகாதவன் ப்ரதம பர்வத்துக்கு ஆளாகான்; ப்ரதம பர்வத்துக்கு ஆளாகாதவன் சரம பர்வத்துக்கு ஆளாவானிறே'' என்று வங்கிபுரத்து நம்பி வார்த்தை. ''ததீயஶேஷத்வஜ்ஞானமில்லாதவனுக்குத் தச்சேஷத்வ ஜ்ஞானமும் இல்லையாய்விடும். பகவத்விஷயத்தில் ஜ்ஞானமில்லாதவன் தத்ப்ராப்த்யர்த்தமாக ஆசார்யோபஸத்தி பண்ணும். ஆசார்யாபிமான நிஷ்டன் ப்ரதமபர்வத்தில் கைவையான்'' என்றபடி. அன்றிக்கே, ''ஆசார்ய ஸம்பந்தம் குலைந்தவன் பகவத்க்ருதமான ஸ்வரூபஸங்கோசத்தை உடையனும். ஈஶ்வராபிமானத்தைக்குலைத்துக்கொண்ட இவனுக்கு ஆசார்யாபி

மானத்திலே ஒதுங்கவேணும். சரமோபாய நிஷ்டனுக்கு ஈச்வராபிமானம் வேண்டுவதில்லை'' என்று இங்ஙனே பொருளாகவுமாம். இத்தால் ''எம்பெருமானாரோடு ஸம்பந்தமில்லாதவனை ஈச்வரன் கைவிடும். ப்ரதமபர்வமான ஈச்வரன் தோஷதர்சநத்தாலே சேதனனைக் கைவிடும். சரமபர்வமான எம்பெருமானார் கைவிடுவதில்லை. எம்பெருமானாரோடு ஸம்பந்தமுண்டானவனுக்குப் பேற்றுக்கு உடலாக ஈச்வரன் கைபார்த்திருக்கவேண்டாவிறே'' என்றபடி. ''தேவுமற்றறியேன் — மேவினேனவன் பொன்னடி மெய்ம்மையே'' என்றிருந்தால். பின்னை அங்ஙனல்லது இராதிறே. 'பொன்னடி' என்றருளிச்செய்தாரிறே. இப்படி ஸர்வ ப்ரகாரத்தாலும் ஸர்வர்க்கும் உத்தாரகர் எம்பெருமானாரேயாகக் குறையில்லை இப்படி உத்தாரகரான எம்பெருமானாருடைய அபிமானத்திலே அந்தர்ப்பவியாதார் நித்ய ஸம்ஸாரிகளாய்ப் போருவர்கள்.

எம்பெருமானார் திருவடிகளிலே பொருந்தி வாழும் போது அவருடைய திருநாமத்தை அநுஸந்திக்கவேணுமிறே எம்பெருமானாருடைய திருநாமோச்சாரணம் தத்பாத கமலப்ராவண்ய ஜனகமாக அருளிச்செய்தாரிறே அமுதனார் — ''இராமாநுசன் சரணாரவிந்தம் நாம் மன்னிவாழ நெஞ்சே சொல்லுவோமவன் நாமங்களே'' என்று நாம் மன்னி வாழ அவன் நாமங்களைச் சொல்லுவோமென்கையாலே, அவன் நாமங்களைச் சொல்லாதபோது பொருந்தி வாழக் கூடாது என்றபடி பொருந்தி வாழும்போது அவன் நாமங்கள் சொல்லவேணுமென்கையாலே தந்நாமாநுஸந்தானம் தத்பாதகமலப்ராவண்ய (ஜநக?) மென்றபடி. இப்படி எம்பெருமானாருடைய திருநாமத்தை அநுஸந்தித்து அவர் திருவடிகளிலே பொருந்தி வாழுகிறவர்களுக்கு ப்ராப்ய ப்ராபகங்களிரண்டும் எம்பெருமானார் திருவடிகளேயிறே. ''பேறொன்று மற்றில்லை நின் சரணன்றி அப்பேறளித்தற்கு ஆறொன்றுமில்லை மற்றச் சரணன்றி'' என்று ப்ராப்ய ப்ராபகங்களிரண்டையும் அவர் திருவடிகளிலே அறுதியிட்டாரிறே அமுதனார். ''பேறொன்று மற்றில்லை நின் சரணன்றி ஆறொன்றுமில்லை'' என்று அந்யயோக

வ்யவச்சேதம் பண்ணுகையாலே சரமபர்வத்திலே ப்ராப்யத்வ ப்ராபகத்வங்களை அறுதியிட்டால், ப்ரதம பர்வத்திலே முதல் தன்னிலே வ்யுத்பத்தி தானுமில்லையோ என்னும்படி ததேக நிஷ்டராய் இருக்கவேணும் என்னுமிடம் தோற்றுகிறது. இத்தால் ஆசார்யாபிமான நிஷ்டராகில் மறுக கலசாதபடியிருக்கவேணுமென்றபடி. இல்லையாகில் இருகரையர் என்னுமிடம் சொல்லப்படும்

வடுகநம்பி, திருவோலக்கத்திலே சென்றால் எம்பெருமானாரை நோக்கி தண்டன் ஸமர்ப்பித்து ஒரு பார்ஶ்வத்திலே கடக்க நிற்பாராய், எம்பெருமானார் வடுகநம்பியை நம்முடைய மதுரகவிகள் என்றருளினாராம். ஆழ்வார்க்கும் ஒரு மதுரகவிகளுண்டிறே. இப்படி இருக்கையாலேயிறே இவர்க்கு ஆழ்வானையும் ஆண்டானையும் இரண்டிட்டுச் சொல்லலாயிற்று. ஒரு நாள் எம்பெருமானார் வடுகநம்பியை அழைத்தருளி, 'வடுகா! ஆசார்யாபிமான நிஷ்டன் எத்தைப்போலே இருப்பான்' என்று கேட்டருள, 'வேம்பின் புழுப்போலே இருப்பன்' என்றருளிச்செய்தார். அதாவது- ''வேம்பின் புழு வேம்பன்றியுண்ணாது'' என்கிறபடியே ஆசார்யனுடைய அபிமானத்திலே ஒதுங்கி இருக்கிறவன் பேற்றுக்கு உடலாக அறுதியிட்டிருப்பது ததபிமானத்தை யொழிய வேறொன்றையும் பேற்றுக்கு உடலாக நினைத்திரான் என்றபடி. 'கரும்பின் புழு' என்று சொல்லுகையன்றிக்கே வேம்பின் புழுவை த்ருஷ்டாந்தமாகச் சொல்லுவானேனென்னில், பரமதயாளுவான ஆசார்யன் தானே-தன் அபிமானத்திலே ஒதுங்கி இருக்கும் ஶிஷ்யனுக்குத் தன் பக்கல் (உள்ள) வைரஸ்யம் பிறக்கும்படி கடாதுகளை தசையிலும் ''நானுன்னையன்றியிலேன்'' என்கிறபடியே ததபிமானராஹித்யத்தில் ஸத்தையில்லை என்னும்படி ''களைகண்மற்றிலேன்'' என்கிறபடியே ததபிமான நிஷ்டனாயிருக்கவேணும் என்னுமிடம் தோற்றுகைக்காகச் சொல்லிற்று. இத்தால்-எம்பெருமானாருடைய அபிமானத்திலே ஒதுங்கிக் கரணத்ரயத்தாலும் ததேகநிஷ்டனாயிருக்கிறவன் தத்வ்யதிரிக்த விஷயங்களில் உத்தாரகத்வ

ப்ரதிபத்தி பண்ணியிரான் — என்றபடி. ஸர்வோத்தாரக மான விஷயத்தைப்பற்றினால் தத்வ்யதிரிக்தரைக்கொண்டு தேவையில்லையிறே. ''பல்லுயிர்க்கும் விண்ணின் தலை நின்று வீடளிப்பான் எம்மிராமாநுசன்'' என்று எம்பெரு மானாரை ஸர்வோத்தாரகராக அறுதியிட்டாரிறே ஸகல வேதஶாஸ்த்ரவித்தமரான அமுதனார்.

நம்பிள்ளை ஒருநாள் எம்பெருமானார் ஸன்னிதியிலே எழுந்தருளி, நூற்றந்தாதி அநுஸந்தித்துச் சாத்தினவுடனே' எம்பெருமானார் திருமுக மண்டலத்தை ஸேவித்து, இன்றைக்கு அடியேனுக்கு ஒரு ஹிதமருளிச்செய்யவேணும் என்று திருமுன்பே அருளிச்செய்து திருமாளிகைக்கு எழுந் தருள, அற்றைக்கு ராத்ரியிலே எம்பெருமானார் ஸ்வப்ன முகேந எழுந்தருளித் திருவடிகளிரண்டையும் நம்பிள்ளை திருமுடியிலே வைத்து, ''உமக்கு ஹிதம் வேணுமாகில் இத்தையே தஞ்சமாக நினைந்திரும். உம்மையண்டினார்க் கும் இதுவே தஞ்சமாக உபதேஶித்துக்கொண்டு போரும், இதுக்குமேல் ஹிதமில்லை'' என்று அருளிச்செய்ய; நம்பிள்ளை —*நம்முடைய பிள்ளையை அழைத்தருளி அருளிச் செய்ய, *பிள்ளையும் அத்தை அத்யாதரத்தோடே கேட் டருளித் தந்நிஷ்டராய் எழுந்தருளியிருந்து, நம்பிள்ளை சரமதஶையிலே, அடியேனுக்கு ஹிதமேதென்று கேட்கிற வளவில், ''எம்பெருமானார் திருவடிகளுண்டாயிருக்க ஹிதமேதென்று கேட்கவேண்டியிருந்ததோ? அவருடைய அபிமானத்திலே அந்தர்ப்பூதராயிருக்கிற நமக்கெல்லாம் ஹிதத்துக்குக் கரையவேண்டா, எம்பெருமானார் திருவடி களே தஞ்சமென்று விஶ்வஸித்துத் ததேக நிஷ்டராயிரும்; நான் பெற்றபேறு நீரும் பெறுகிறீர்'' என்று அருளிச் செய்தார்.

இப்படி எல்லாரும் உத்தாரகத்வேந அறுதியிடும்படி அவதார விஶேஷமாய், பரமகாருணிகராய் எழுந்தருளி யிருக்கிற எம்பெருமானாருடைய அபிமானத்திலே அந்தர்ப்

* நம்முடைய பிள்ளை — பெரியவாச்சான் பிள்ளை.

பூ₄தராய் அவர் திருவடிகளையே ப்ராப்யப்ராபகமாக அறுதியிட்டுத் தத₃க நிஷ்ட₂ராயிருக்கும் சரமாதி₄காரிகளுக்கு வஸ்தவ்யபூ₄மி—''இராமாநுசனைத் தொழும் பெரியோர் எழுந்திரைத்தாடுமிடம் அடியேனுக்கிருப்பிடம்'' என்று அமுதனார் அருளிச்செய்கையாலே, எம்பெருமானார் பக்கல் ப்ராவண்யம் உடையரசன ஜ்ஞாநாதி₄கர்கள் களித்து வர்த்திக்குமிடமே வாஸஸ்த₂ானமென்றபடி. இங்கிருக்கும் நாள் அநுப₄வத்துக்கு விஷயமேதென்னில், ''உவந்தருந்தேன் அவன் சீரன்றி யானொன்றுமுள் மகிழ்ந்தே'' என்கையாலே எம்பெருமானாருடைய கல்யாண குணங்கள்தானே அநுப₄வத்துக்கு போ₄க்₃யத்வேந விஷயம். ''இராமாநுசன் மிக்க சீலமல்லால் உள்ளாதென் நெஞ்சு'' என்கையலே எம்பெருமானாருடைய அபரிச்சி₂ன்னமான ஶீலகு₃ணத்தை நெஞ்சுக்கு விஷயமாக்குகை சரமாதி₄காரிக்கு க்ருத்யம் என்றருளிச்செய்தபடியிறே. ''இராமாநுசன் தன் பிறங்கிய சீர் சாரா மனிசரைச் சேரேனெனக்கென்ன தாழ்வினியே'' என்கையாலே, எம்பெருமானாருடைய ஔஜ்ஜ்வல்ய கல்யாண கு₃ணங்களில் ப்ராவண்யமில்லாத கள்ளர்மிண்டரோடே ஸஹவாஸமின்றிக்கேயிருக்கிறது சரமாதி₄காரிக்கு ஏற்றமென்றபடி. ''சேரேனெனக்கென்ன தாழ்வினியே'' என்று தத்ஸஹவாஸராஹித்யம் ஆதி₄க்யாவஹமென்கையாலே தத்ஸஹவாஸம் அநர்த்த₂ாவஹமென்றபடி. எம்பெருமானார் திருவடிகளில் ப்ராவண்யமுடையார் அதில்லாத மூர்க்க₄ரோடு ஸஹவாஸம் பண்ணில் ஸ்வரூபஹானி பிறக்குமிறே. ''இராமாநுசன் புகழன்றி என்வாய் கொஞ்சிப் பரவகில்லாது'' என்கையாலே எம்பெருமானாருடைய கல்யாண கு₃ணங்களே சரமாதி₄காரிகளுக்கு வாசா அநுஸந்தே₄யமென்றபடி. ''இராமாநுசன் மன்னுமாமலர்த்தாள் அயரேன்'' என்கையாலே, எம்பெருமானார் திருவடிகளை மறவாதிருக்கை தத₃பி₄மான நிஷ்ட₂னுக்குக் கர்த்தவ்யம் என்றபடி. ''அருவினை என்னை எவ்வாறின்றடர்ப்பதுவே'' என்கையாலே தத்ஸ்மரணமே, அநிஷ்டநிவ்ருத்திகரம் என்றபடி. தத்₃விஸ்மரணம் அநர்த்த₂ாவஹம் என்னுமிடம் அர்த்த₂ாத் ஸித்₃த₄ம். ''உன்தொண்டர்கட்கே அன்புற்றி

ருக்குப்படி என்னையாக்கி அங்காட்படுத்தே'' என்கை யாலே, எம்பெருமானார் திருவடிகளுக்கு அநந்யார்ஹசேஷபூதரான ஸ்ரீவைஷ்ணவர்கள் பக்கலில் புக்தியிருக்கும்படி தச்சேஷத்வத்தை எம்பெருமானார் திருமுன்பே ப்ரார்த்திக்கை ததபிமான நிஷ்டனுக்கு ஸ்வரூபம். ''உன் தன மெய்யில் பிறங்கிய சீரன்றி வேண்டிலன் யான்......... இவ்வருள் நீ செய்யில் தரிப்பன் இராமாநுச'' என்கையாலே எம்பெருமானாருடைய விக்ரஹ குணங்களை ஸத்தாதாரகமாக நினைத்திருக்கை சரமாதிகாரிக்ருத்யம். ''இராமாநுசன் திருநாமம் நம்பவல்லார் திறத்தை'' என்று தொடங்கி ''செய்வன் சோர்வின்றியே'' என்கையாலே எம்பெருமானாருடைய திருநாமத்திலே விஶ்வாஸயுக்தரான ஸ்ரீவைஷ்ணவர்களை மறவாத பாகவதர்கள் பக்கல் கரணத்ரயத்தாலும் ஸகலவித கைங்கர்யங்களும் வழுவில்லாமல் செய்து போருகை சரமாதிகாரிக்கு ஸ்வரூபம். எம்பெருமானாருடைய திருநாமத்தை விஶ்வஸித்துப் பரிஶீலனம் பண்ணுதார்க்குப் பேறு துர்லபமாயிருக்கும். ''இராமாநுசன் திருநாமம் நம்பிக்கல்லார் அகலிடத்தோர் எது பேறென்று காமிப்பரே'' என்று துர்லபமாக அருளிச்செய்தாரிறே அமுதனார். இந்த அர்த்தங்களெல்லாம் எம்பெருமானாருடைய திருமுகமண்டலத்தைப் பார்த்து அருளிச்செய்ய. அவரும் இதுக்கெல்லாம் இசைந்தெழுந்தருளியிருக்கை யாலே இவ்வர்த்தம் அவிசார்யமாய் ஸுத்ருடமான ஸகல ப்ரமாணப்ரமேயப்ரஹ்மதீர்க்க(?) ரஸோக்தி-அநுஷ்டாந ஸித்தம். இவ்வர்த்தம் 36. **''सत्यं सत्यं पुनस्सत्यं यतिराजो जगद्गुरुः। स एव सर्वलोकानामुद्धर्ता नात्र संशयः॥''** (ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு: । ஸ ஏவ ஸர்வலோகாநாம் உத்தர்த்தா நாத்ர ஸம்ஶய: ||) ''இராமாநுசன் மன்னுமாமலர்த்தாள் பொருந்தா நிலையுடைப்புன்மையினோர்க்கு ஒன்றும் நன்மை செய்யாப் பெருந்தேவரைப் பரவும் பெரியோர்தம் கழல் பிடித்தே'' என்கையாலே எம்பெருமானார் திருவடிகளிலே ப்ராவண்ய

மில்லாதார்க்கு யாவதா3த்மபா4வி ஸம்ஸாரம் அநுவர்த்திக்கும். உடையோருக்கு யாவதா3த்மபா4வி ஸர்வாபீ4ஷ்டங்களும் ஸித்3தி4க்கும்.

சரமோபாய நிர்ணயம் முற்றிற்று
நாயனாராச்சான் பிள்ளை திருவடிகளே சரணம்.
எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.
ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

சரமோபாய நிர்ணய ப்ரமாணத்திரட்டு

1. யாவரொருவருடைய அருளாலே அடியேன் சரமோபாய நிர்ணயத்தைச் சொல்லப்போகிறேனோ, என் ஆசார்யராய், அப4யப்ரதா3பாதா3ர் என்னும் திருநாமமுடைய அப்பெரியவாச்சான் பிள்ளையை ஆஸ்ரயிக்கிறேன்.

2. அடியேனுடைய தந்தையாருடைய கருணையமுதத்தினால் உயிர்ப்பிக்கப்பட்ட ஆத்மாவையுடைய அடியேன் எந்தையார் அருளிய முறையிலே சரமோபாய நிர்ணயத்தைச் செய்கிறேன்.

3 உலகனைத்துக்கும் ஆசார்யராய், நமக்கு உத்தாரகரான எதிராசரை வணங்குகிறேன்; அவருடைய கருணையினால் தூண்டப்பட்டுச் சரமோபாய நிர்ணயத்தைச் செய்கிறேன்.

4. எம்பெருமானாருக்கு முன்னும் பின்னுமிருந்த ஆசாரியர்களின் ஸ்ரீஸூக்திகளைக் கொண்டும், ஸ்வப்ன வ்ருத்தாந்தங்களாலும், சரமோபாயத்வம் உடையவரிடத்திலேயே பொருந்தும் என்று அடியேனால் நன்கு நிரூபிக்கப்படுகிறது.

5. விஷ்ணு: ஶேஷீ ததீ3ய: ஶுப4கு3ணநிலயோ
விக்3ரஹ: ஸ்ரீஶடா2ரி:

1, 2, 3, 4. நாயனாராச்சான் பிள்ளையருளிய உபோத்3கா4தகாரிகைகள். 5. பெரியவாச்சான் பிள்ளையருளியதாக ஸ்ரீவைஷ்ணவ ஸமயாசார நிஷ்கர்ஷத்தில் எடுக்கப்பட்ட ஶ்லோகம்.

ஸ்ரீமாந் ராமாநுஜார்ய: பத₃கமலயுக₃ம் பா₄தி
ரம்யம் தத₃ீயம் |
தஸ்மிந் ராமாநுஜார்யே கு₃ருரிதி ச பத₃ம் பா₄தி
நாந்யத்ர, தஸ்மாத்
ஶிஷ்டம் ஸ்ரீமத்₃கு₃ரூணாம் குலமித₃மகி₂லம் தஸ்ய
நாத₂ஸ்ய ஶேஷ: ||

[விஷ்ணுவானவர் அனைவர்க்கும் ஶேஷியாயிருப்பவர்: நற்குணங்களுக்கு இருப்பிடமான நம்மாழ்வார் அவருடைய திருமேனியாவார். கைங்கர்யச் செல்வம் நிறைந்த எம்பெருமானார் அந்த நம்மாழ்வாருடைய அழகிய திருவடித் தாமரையிணையாய் விளங்குகிறார். அந்த எம்பெருமானாரிடத்திலேயே ஆசார்ய ஶப்₃த₃ம் நிறை பொருளுடையதாய் விளங்குகிறது. வேறெவரிடமும் அப்படி விளங்கவில்லை. ஆகையால், மற்ற ஸதா₃சார்ய பரம்பரை முழுவதும் அந்த எம்பெருமானார்க்கு ஶேஷமாயிருப்பது.]

6. கு₃ருபரம்பரா ப்ரப₄ாவ ப்ரமாணத்திரட்டு-569.

7. ,, ,, -590.

8. யாவரொரு ஆசார்யர் தம் அடியடைந்தவர்களைத் தம் கருணையினாலேயே ரக்ஷிக்கிறாரோ, அவரே அளத்தற்கரிய முக்₂யாசார்யராவார். நல்லோர்களால் அப்படியே சொல்லப்படுகிறதன்றோ

9. இலக்குவன் ராமனுடைய வலதுகை போன்றவன்.

10. எந்த நம்மாழ்வார் கருணைமிக்கவராய், அடியேன் தூங்கும்போது ப₄விஷ்யதா₃சார்யரின் சிறந்த விக்₃ரஹத்தை எனக்குக் காட்டியருளினாரோ, காரியாரின் பிள்ளையான அவரை ஶரணமடைகிறேன்.

11. 'வைஷ்ணவன் நம் குலத்தில் பிறந்துவிட்டான்; நம்மைக் கரையேற்றுவான்' என்று பித்ருக்கள் கைகொட்டி ஆர்ப்பரிக்கிறார்கள்; பிதாமஹர்கள் நடனமாடுகிறார்கள்.

12. கு₃ருபரம்பரா ப்ரப₄ாவ ப்ரமாணத்திரட்டு-6 & 7.

---

8. ஸோமாசியாண்டான் அருளிய கு₃ருகு₃ணாவளி.

9. ரா-அ-84-13. 10. நாத₂முனிகளருளியது. 11. வராஹபுராணம்.

13. மத்₃ப₄க்தஜநவாத்ஸல்யம் பூஜாயாஞ்சாநுமோத₃நம் ।
ஸ்வயமப்₄யர்ச்சநஞ்சைவ மத₃ர்த்தே₂ ட₃ம்ப₄வர்ஜநம் ॥
மத்கதா₂ஶ்ரவணே ப₄க்தி: ஸ்வரநேத்ராங்க₃விக்ரியா ।
மமாநுஸ்மரணம் நித்யம் யஶ்ச மாம் நோபஜீவதி ॥
ப₄க்திரஷ்டவிதா₄ ஹ்யேஷா யஸ்மிந் ம்லேச்சே₂பி வர்த்ததே ।
ஸ விப்ரேந்த்₃ரோ முநி: ஶ்ரீமாந் ஸ யதி: ஸ ச பண்டி₃த:॥
தஸ்மை தே₃யம் ததோ க்₃ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதா₂ ஹ்யஹம் ॥

[(1) என் ப₄க்தர்களிடத்தில் வாத்ஸல்யம், (2) என்னை ஆராத₄னம் செய்வதை ஆமோதி₃த்தல், (3) தானே என்னைப் பூஜித்தல், (4) என் விஷயத்தில் ஆடம்பரமற்றிருத்தல், (5) என் கதைகளைக் கேட்பதில் அன்பு, (6) (என் கதைகளைக் கேட்கும்போது) குரல் தழதழத்தும், கண்ணீர் மல்கியும், உடம்பு மயிர்க்கூச்செறிந்துகொண்டுமிருக்கை, (7) எப்போதும் என்னை நினைத்திருக்கை, (8) என்னிடம் வேறு ஒரு ப்ரயோஜனத்தையும் கேளாதிருக்கை-என்னும் இந்த எட்டு வித₄மான ப₄க்தியானது எந்த மிலேச்ச₂னிடமும் காணப்படுகிறதோ அவனே ப்₃ராஹ்மணஶ்ரேஷ்ட₂ன்; அவனே முனிவன்; அவனே த₄னவான்; அவனே இந்திரிய நியமனம் செய்தவன்; அவனே பண்டி₃தன்; அவனுக்கு ஞானத்தை உபதே₃ஶிக்கலாம்; அவனிடமிருந்து ஞானோபதே₃ஶமும் பெறலாம். அவன் என்னைப்போல் பூஜிக்கத்தக்கவன்.]

14. உப₄யவிபூ₄தியும் இவனுக்கும் எனக்கும் ஶேஷமாயிருப்பது.

15. எனக்கு எது நல்லது என்று உன்னால் நிஶ்சயிக்கப்படுகிறதோ, அதை எனக்குச் சொல்லுவாயாக. நான் உனக்கு ஶிஷ்யன். உன்னை ஶரணமடைந்த என்னை நியமிப்பாயாக.

16. ஞானிகளை வணங்குவதாலும், நேரே குறிப்பிடாமல் கேட்பதாலும், ஶுஶ்ரூஷை செய்வதாலும் ஆத்மாவைப்

---

13. க₃ருட₃ம் 219-6 to 9.
14. விஷ்வக்ஸேநஸம்ஹிதை 15 கீதை 2-7 16. கீதை 4-34

பற்றிய அறிவைப் பெறுவாயாக, உண்மையைக் கண்ட ஞானிகள் உனக்கு அவ்வறிவை உபதேசிப்பார்கள்.

17. குருபரம்பரா ப்ரபாவ ப்ரமாணத்திரட்டு-305.
18. ,, ,, -306.

19. ஜனக வம்சத்திற்கு என் பெண் புகழை உண்டாக்குவாள்.

20. யஶ்ச ராமம் ந பஶ்யேத்து யஞ்ச ராமோ ந பஶ்யதி ।
நிந்திதஃ ஸ வஸேல்லோகே ஸ்வாத்மாப்யேநம் விகர்ஹதே ॥
[எவனொருவன் ராமனைக் காணாதிருப்பனோ, எவனை ராமனும் காணாதிருக்கிறாரோ அவன் உலகில் நிந்திக்கப்பட்டவனாய் வாழ்வான்: தன் ஆத்மாவும் இவனை இகழும்.]

21. இமௌ ஸ்ம முநிஶார்தூல! கிங்கரௌ ஸமுபஸ்திதௌ ।
ஆஜ்ஞாபய யதேஷ்டம் வை ஶாஸநம் கரவாவ கிம் ॥
[முநிஶ்ரேஷ்டரே! நாங்களிருவரும் (தேவரீருக்குக்) கைங்கர்யம் செய்பவர்களாக அருகில் இருக்கிறோம். (தேவரீருடைய) இஷ்டப்படி கட்டளையிடவேண்டும்; (தேவரீருடைய) எந்தக் கட்டளையை நாங்கள் செய்யவேண்டும்?]

22. நான் உனக்கு அடியேன்; உனக்கு இப்போது என்ன செய்வேன்?

23. விஷ்ணுவானவர் மனிதவுருவுடன் பூமியில் ஸஞ்சரித்தார்.

24. கோவிந்தனே! இப்போதும் உலகங்களுக்கு நன்மைக்காக மனிதவுருக்கொண்டு த்வாரகையில் நிற்கிறாய்.

25. குருபரம்பரா ப்ரபாவ ப்ரமாணத்திரட்டு-356.
26. ,, ,, -355.

27. அயம் ஸ கத்யதே ப்ராஜ்ஞைः புராணார்த்தவிஶாரதைः ।
கோபாலோ யாதவம் வம்ஶம் மக்நமப்யுத்தரிஷ்யதி ॥
[புராணப் பொருள்களிலே பண்டிதர்களான பேரறிவாளர்களாலே அவனே கோபாலனென்று கொண்டாடப்படு

---

19. ரா-பா 67-22 20. ரா-அ 17-14 21. ரா-பா 31-4.
22. 23 பாரதம்-வனபர்வம் 27 வி-பு. 5-20-49

கிருன். தாழ்ந்து கிடந்த யது₃குலத்தைக் கைதூக்கிவிடப் போகிருன் இவன்.]

28. கு₃ருபரம்பரா ப்ரப₄ாவ ப்ரமாணத்திரட்டு-273.

29. ந த₄ர்மநிஷ்டோ₂ऽஸ்மி ந சாத்மவேதீ₃ ந ப₄க்திமாந் த்வச்சரணாரவிந்தே₃ ।
அகிஞ்சநோऽநந்யக₃தி: ஶரண்ய த்வத்பாத₃மூலம் ஶரணம் ப்ரபத்₃யே ॥

[கர்மயோகத்தில் நிலைநிற்பவனல்லேன்; ஆத்மஜ்ஞானமுமில்லாதவன்; உன் திருவடித்தாமரையில் ப₄க்தியோக₃மும் இல்லை. கைம்முதலற்றவன்; வேறு புகலற்றவன்; ஶரணமடையத்தக்கவனே! உன் திருவடியை ஶரணமடைகிறேன்.]

30. கு₃ருபரம்பரா ப்ரப₄ாவ ப்ரமாணத்திரட்டு-278.

31. காருண்யத்தால் ஆசார்யர்களுள் சிறந்தவர் எதிராஜர்.

32. கு₃ருபரம்பரா ப்ரப₄ாவ ப்ரமாணத்திரட்டு-266.

33. ,, ,, -417.

34. ,, ,, -43.

35. தன் சரமகாலத்தில் தன் திருவடிவாரத்திலிருந்த நாலு ஶிஷ்யர்களைப் பார்த்து நடாதூரம்மாள் 'ப₄க்தி ப்ரபத்திகள் உங்களுக்குச் செயற்கரியவையாகில் எம்பெருமானாரை ஶரணமாகக் கொள்ளுங்கள்' என்று உபதே₃ஶித்தார்.

36. கு₃ருபரம்பரா ப்ரப₄ாவ ப்ரமாணத்திரட்டு-419.

37. உபாயமாகவும், உபேயமாகவும் ஆசார்யனையே ஶரணமடையவேண்டும்.

38. தஸ்மை நமோ மது₄ஜித₃ங்க்₄ரி ஸரோஜதத்வ ஜ்ஞாநாநுராக₃மஹிமாதிஶயாந்தஸீம்நே ।
நாத₂ாய நாத₂முநயேऽத்ர பரத்ர சாபி நித்யம் யதீ₃யசரணௌ ஶரணம் மதீ₃யம் ॥

[இவ்வுலகிலும், மேலுலகிலும் எப்போதும் எந்த ஸ்ரீமந் நாத₂முனிகளுடைய திருவடிகள் எனக்குப் புகலிடமோ,

29. ஸ்தோத்ரரத்னம் 22 38. ஸ்தோ-ர 2.

மதுரகவி அறித்த எம்பெருமானுடைய திருவடித்தாமரைகளைப் பற்றிய உண்மையறிவினுடையவும் அன்பினுடையவும் பெருமேன்மையின் முடிவில் எல்லையாயிருப்பவரும், எனக்கு நாதராயிருப்பவருமான அந்த நாதமுனிகட்கு நமஸ்காரம்.]

39. ஸாத்யமில்லாவிடில் ஸாதனங்களால் என்ன பயன்?

40 உபாதத்தே ஸத்தாஸ்திதிநியமநாத்யைஶ்சிதசிதௌ
ஸ்வமுத்திஶ்ய ஶ்ரீமாநிதி வததி வாகௌபநிஷதீ।
உபாயோபேயத்வே ததிஹ தவ தத்த்வம் ந து குணௌ
அதஸ்த்வாம் ஶ்ரீரங்கேஶய ஶரணமவ்யாஜமபஜம்॥

[ஹே ஶ்ரீரங்கநாதனே! 'ஶ்ரீமந்நாராயணன் ஸ்ருஷ்டி, ஸ்திதி, நியமனம் முதலிய காரியங்களால் சேதநாசேதனங்களைத் தனக்காக ஸ்வீகரிக்கிறான்' என்று உபனிஷத் வாக்யமானது சொல்லுகிறது. ஆகையால் இவ்விஷயத்தில் உபாயத்வமும் உபேயத்வமும் உனக்கு முக்யம்; கௌணமல்ல. ஆகையால் உன்னை நிர்வ்யாஜமான உபாயமாக அடைந்தேன்.]

41 மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதி:
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்।
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்
ஶ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா॥

[என் வம்ஶத்தவர்களுக்கு எப்போதும் தாயும், தந்தையும், மாதரும், மக்களும், பெருஞ்செல்வமும், மற்றுமுள்ள எல்லாமும் எப்போதும் எந்த ஆழ்வாருடைய திருவடியிணையேயோ, நமக்கு முதல்வரும், குலபதியுமான அவருடைய, மகிழமலராலே அலங்கரிக்கப்பட்டதும், வைஷ்ணவச் செல்வமுடையதுமான அத்திருவடியிணையைத் தலையால் வணங்குகிறேன்.]

42. ஆசாரியர்கள் நேரில் துதிக்கத்தக்கவர்கள்.

சரமோபாய நிர்ணய ப்ரமாணத்திரட்டு முற்றிற்று.

---

39. வி-பு-1-19-36. 40 ர-ஸ்த 2-88 41. ஸ்தோ-ர 5.

ஸ்ரீ:

சரமோபாய நிர்ணய
ப்ரமாணங்களின் அட்டவணை